பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 04

சனிக்கிழமை
30 நவம்பர் 2024

கார்த்திகை 15 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## வடக்கில் நேற்று கடுங்குளிர்

முல்லைத்தீவு, நவ. 30
வடமாகாணத்தில் நேற்று மாலை 4 மணிமுதல் கடும் குளிரான கால நிலை நிலவியதாகத் தெரிவிக்கப் ☞12

பேஸ்புக்கில் தலைவர் பிரபாவின் படம்

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் தமிழ் இளைஞர் ஒருவர் கைது!

வெளுக்கின்றது தேசிய மக்கள் சக்தியின் சாயம்

**யாழ்ப்பாணம், நவம்பர் 30**

**பேஸ்புக் தளத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் ஒளிப்படத்தைப் பதிவிட்ட இளைஞர் ஒருவர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.** ☞15

## 4,800 ஏக்கரில் பயிரழிவு

»03

## விளையாட்டில் மோசடியெனில் அறிவியுங்கள்

»02

## புலிகளை அஞ்சலிப்பதற்கு நிரந்தரத்தடை விதிக்குக!



கொழும்பு, நவ. 30
இலங்கையில் விடுதலைப் புலிகளை அஞ்சலிப்பதற்கு இடம் வழங்கக்கூடாது என்று முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.
தமிழர்களின் பகுதிகளான வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இம்முறை மாவீரர்தினம் கடைப்பிடிக்கப்பட்டுள்ள நிலையிலேயே, விடுதலைப் புலிகளை ☞15

## இடமாற்றம்!

யாழ்ப்பாணம், நவ. 30
வடக்கு - கிழக்கில் பணியாற்றிய சுகாதார சேவைகள் திணைக்களை பிரதி பணிப்பாளர் மற்றும் மருத்துவ மனைப் பணிப்பாளர்கள் சிலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, மருத்துவர் ☞15

## ஐ.தே.க.வுக்கு மீண்டும் வரவேண்டுமாம் சஜித்!

கொழும்பு, நவ. 30
ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித், மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் திரும்ப வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க அழைப்பு விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும்தெரிவித்ததாவது:- "கட்சி பிளவுபட்டிருந்தால் தோல்விகள்தான் குவியும். நாம் இணைந்தால் தான் ☞15

முல்லைக் கடற்கரையில்

## சுனாமி ஒலியால் மக்கள் பதற்றம்!

முல்லைத்தீவு, நவ. 30
முல்லைத்தீவு கடற்கரையில் நேற்று சுனாமி எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டதால் மக்கள் பதற்றமடைந்துள்ளனர். முல்லைத்தீவு கடற்கரையை அண்மித்த ☞15

## தீவிரமான புயலாக மாறியது பெங்கால்

### சிக்கியது தமிழகம் வடக்கு அருந்தப்பு

சென்னை, நவ. 30
இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கு அருகாக கடந்த மூன்று நாள்களாக நகர்ந்து கொண்டிருந்த பெங்கால் புயல், நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் 'தீவிரமான' புயல் என்ற நிலையை அடைந்துள்ளது. இன்று அது மணிக்கு 90 கிலோமீற்றர் ☞15

இடர் நிவாரணங்களுக்காக

## யாழ். மாவட்டத்துக்கு 12 மில்லியன் ரூபா!

யாழ்ப்பாணம், நவ. 30
வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு முதற்கட்ட நிவாரண நிதியாக 12 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளது. ☞12

## போதுமான மருந்துகள் கையிருப்பில் உள்ளன

யாழ்ப்பாணம், நவ. 30
வெள்ளப் பேரிடர் ஏற்படும் போது அதைச் சமாளிக்கக் கூடிய வகையில் தேவையான மருந்துகள் கையிருப்பில் உள்ளன என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவ ☞15

யாழ். மாவட்டத்தில் இன்னும்

## 7,000க்கும் மேற்பட்டோர் இடைத்தங்கல் முகாமில்

யாழ்ப்பாணம், நவ. 30
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பேரிடரால் இன்னமும் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இடைத்தங்கல் முகாம்களி ☞12




'மாற்றம் மாற்றம் என்டு வாக்கை வாங்கிப் போட்டு அவையள் மாறாமலேயே இருக்கினம் கண்டியளோ'

## தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை குழப்பக்கூடாது சீனத் தூதுவர்!

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் சாட்டை

யாழ்பாணம், நவ. 30
சீனத் தூதுவர் தமிழ்த் தேசியத்தைக் குழப்பி விடும் வகையிலும், தமிழ் மக்களின் வேணவாக்களுக்கு எதிராகவும் கருத்துரைக்கக்கூடாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் வந்திருந்த சீனத்தூதுவர் தேர்தல் முடிவுகளை வரவேற்றிருந்தார். "வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தியை ஆதரித்திருப்பது வரவேற்கத்தக்கது. இந்த மாற்றத்தை வரவேற்கின்றோம். நல்லிணக்கத்தை நோக்கிய பயணத்துக்கு தமிழர்கள் ஒரு சமிக்ஞையை வெளிப்படுத்தியுள்ளனர்" என்றவாறாக சீனத் ☞15

## எலிக்காய்ச்சல் உயிராபத்தே!

»05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் அரசியல் தீர்வை சீனா வரையறுப்பது மடமையே

## யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், நவ. 30**

**இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தல் முடிவை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு தமிழ் மக்களின் தீர்வை சீனா கணிப்பிடமுடியாது. தமிழ் மக்கள் இன்றுவரை அரசியல்ரீதியாக ஒடுக்கப்பட்ட இனமாகவே உள்ளார்கள் .**

-இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் மனோகரன் சோமபாலன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் யாழ். மாவட்டத்துக்கு வருகை தந்த சீனத்தூதுவர் தமிழ் மக்கள் மாற்றத்துக்கு வாக்களித்து தமது தீர்வு தொடர்பில் வெளிப்படுத்தியுள்ளனர் எனத் தெரிவித்தார்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் காணாமலாக்கப்பட்டவர்களுக்கான தீர்வுகள் இன்னமும் கிடைக்கவில்லை. அரசியல் கைதிகள் இன்றுவரை விடுவிக்கப்படவில்லை. தமிழ்மக்களின் இனப்படுகொலை இன்றுவரை தொடர்ந்து வருகின்றது.

தமிழ் மக்கள் இன்றுவரை அரசியல்ரீதியாக ஒடுக்கப்பட்டு வருகின்றார்கள். அந்த அடக்குமுறையின் வீரியமும் வெளிப்படுகைகளும் மாறியிருக்கின்றன தவிர தமிழ் மக்கள் இன்றும் அடக்குமுறைக்கு உட்பட்ட இனமாகவே இருக்கின்றார்கள். அண்மையில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலை அடிப்படையாக வைத்துக் கொண்டு தமிழ் மக்களின் அரசியலை தீர்மானிப்பது எந்த வகையிலும் பொருத்தமற்றது.

ஆகவே இனப்படுகொலைக்கான நீதி, காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை உள்ளிட்ட விடயங்கள் சர்வதேச நீதிமன்றத்தில் விசாரிக்கப்படவேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம் - என்றார். (ச-125)

# கல்லடைசலால் பாதித்த பெண் தனியார் படகில் வரவழைப்பு!

யாழ்ப்பாணம், நவ. 30

கல்லடைசல் காரணமாக அனலை தீவைச் சேர்ந்த பெண்ணொருவர் யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்படவேண்டிய தேவை ஏற்பட்ட நிலையில் கடற்படை மற்றும் விமானப்படையின் உதவி கிட்டாத நிலையில் பாதிக்கப்பட்ட பெண் நேற்றுமுன்தினம் காலை தனியார் படகின் மூலம் அழைத்துவரப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தின்போது இந்த விடயம் சுட்டிகாட்டப்பட்டது.

நோயின் தீவிர தன்மையைக் கருத்திற் கொண்டு உறவினர்கள் தனியார் படகில் கொண்டுவருவதற்கு அனுமதி கேட்டனர்.

இந்தநிலையில் ஊர்காவற்றுறை வரை தனியார் படகில் குறித்த பெண் அழைத்துவரப்பட்டு பின்னர் அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அவருக்காக சிகிச்சைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாக யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்தார். (ச-125)

# பாதுகாப்புச்செயலர் வடமராட்சிக்கு களவிஜயம்

யாழ்ப்பாணம், நவ. 30

சீரற்ற காலநிலை காரணமாக பருத்தித்துறை, வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் அதிக பாதிப்புக்குள்ளான கற்கோவளம் புனித நகர் கிராமத்துக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்தா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை திடீர் விஜயம் மேற்கொண்டு களநிலைவரம் தொடர்பில் ஆராய்ந்தார்.

அத்துடன் வெள்ள நிலைமை தொடர்பில் ஆராய்ந்ததுடன் கிராம மக்களிடமும் கலந்துரையாடினார். இந்தப் பகுதியில் ஏற்பட்ட இடர்பாடு தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாகவும் அவர் பொது மக்களிடம் உறுதியளித்தார். (ச-100)

# இலங்கைக்கான தூதுவர்கள் நியமனம்

கொழும்பு, நவ.30

இலங்கைக்கான தூதுவர்களுக்கான நியமனம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதில் புதுடில்லியைத் தளமாகக்கொண்ட இலங்கைக்கான ஜோர்ஜியாவின் தூதுவராக வக்டங் ஜோஷ்விலி, சீனியக் குடியரசின் தூதுவராக அலஸ்ஸென் கொண்தே, கொங்கோ குடியரசின் தூதுவராக ரேமண்ட் சர்ஜே பெலே மற்றும் ஆர்மேனியக் குடியரசின் தூதுவராக வஹாகன் ஆஃப்யன் ஆகியோர் இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடன் நியமிக்கப்பட்டனர். இவர்கள் தங்களது தகுதிச் சான்றிதழ்களை இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம், கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்தில் சமர்ப்பித்தனர். (ச-45-10)



# பால்மா திருடிய பெண் கைது

கொழும்பு, நவ. 30

கொழும்பிலுள்ள பல்பொருள் அங்காடியில் குழந்தைகளுக்கான பால்மாவைத் திருடிய சந்தேகத்தில் பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சுமார் ஆறாயிரம் ரூபா பெறுமதியான பால்மா களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# மின்சாரம் தாக்கி தம்பதியர் பலி

கொழும்பு, நவ. 30

முந்தல் பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மின்சாரம் தாக்கியதில் கணவனும் மனைவியும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர்கள் 55 மற்றும் 52 வயதுடையவர்களாவர் என்றும் தெரிவிக்கப்பட்டது (ச-இ)

# வடமராட்சி கிழக்கில் 1,160 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ.30

மழை வெள்ள இடர்களால் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் 391 குடும்பங்களைச் சேர்ந்த 1160 பேர் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், 91 பேர் நான்கு நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவதாக மருதங்கேணி பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். மழைவெள்ளப்பாதிப்பு நிலைவரம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ரி-100)

# மரக்கறி விலை சடுதியாக உயர்வு

கொழும்பு, நவ. 30

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளதாக மரக்கறி வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். மரக்கறிச் செய்கை நீரில் மூழ்கியுள்ளமையே இதற்கான காரணம் என அவர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# விளையாட்டில் ஊழல் மோசடியெனில் அறிவியுங்கள்

கொழும்பு, நவ. 30

விளையாட்டு நிறுவனங்களில் இடம்பெறும் மோசடிகள் மற்றும் ஊழல்கள் தொடர்பில் நேரடியாகத் தெரிவிக்குமாறு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் சுனில் குமார கமகே பொது மக்களை வலியுறுத்தியுள்ளார். அரசியல் தொடர்புகள் மற்றும் கடந்த கால குறைபாடுகளை விட்டுவிட்டு முன்னேறவேண்டும். எனினும், நடந்துள்ள மோசடி மற்றும் ஊழல்களை புறக்கணிக்கமுடியாது. குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால தேசிய திட்டங்களை நோக்கி முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார் .(ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சீரற்ற காலநிலையால்

# 4,800 ஏக்கர் செய்கை நீரில் மூழ்கி அழிவு!

கொழும்பு, நவ. 30

**நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலையால் பெரும்போக விவசாயத்தில் 4,800 ஏக்கர் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், 3,900 ஏக்கர் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயத்துறை இராஜாங்க அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.**

வெள்ளப்பெருக்கினால் இதுவரையில் 106 குளங்கள் சேதமடைந்துள்ளன. 30 பெருங் குளங்களும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. இவற்றைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. தேசிய மட்டத்தில் விவசாயத்துறையை மேம்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விவசாயிகளைவளப்படுத்தாமல் தேசிய உற்பத்திகளை மேம்படுத்தமுடியாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



## 9 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, நவ. 30

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக 9 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கண்டி, கேகாலை, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் சில பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பதுளை, கொழும்பு, கம்பஹா, கேகாலை, குருநாகல், நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## 500 கிலோ போதையுடன் இலங்கைப் படகுகள் மீட்பு

கொழும்பு, நவ. 30

இலங்கைக் கொடியுடன் வந்த இரண்டு படகுகளிலிருந்து 500 கிலோகிராம் கிரிஸ்டல் மெத் என்ற போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதாக இந்திய கடற்படையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரபிக்கடலில் பயணித்த குறித்த இரண்டு படகுகளும் இந்திய மற்றும் இலங்கை கடற்படையினரின் கூட்டு நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர்களுடன் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் தொகை மற்றும் இரண்டு படகுகளும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக இலங்கை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## நிவாரணப் பணி பார்வையிட குழு

கொழும்பு, நவ. 30

ஜனாதிபதி அநுரகுமாரதிஸாநாயக்கவின் பணிப்புரையின் கீழ் வெள்ளத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட அமைச்சரவை அமைச்சர்கள் தலைமையில் 2 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. (ச-இ)

## மத்ரஸா மாணவர் பலி; அதிபர், ஆசிரியர் கைது

கொழும்பு, நவ. 30

அம்பாறை, காரைதீவில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்ற உழவியந்திரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு மத்ரஸா மாணவர்கள் உயிரிழந்த சம்பவம் தொடர்பில், நிந்தவூர் மத்ரஸாவைச் சேர்ந்த அதிபரும் ஆசிரியரும் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தையடுத்து கைதுசெய்யப்பட்ட உழவியந்திர சாரதிக்கு உதவியாளராகக் கடமையாற்றிய இருவரையும் பிணையில் செல்ல சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

கடந்த 26 ஆம் திகதி வெள்ளம் காரணமாக பேருந்துகள் கிடைக்காததால் பாடசாலை முடிந்ததும் உழவியந்திரத்தில் வீடு திரும்புமாறு குறித்த அதிபர் பாடசாலை மாணவர்களுக்குப் பணித்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-இ)

## கிளிநொச்சியில் 910 பேர் இடைத்தங்கல் முகாம்களில்

கிளிநொச்சி, நவ. 30

கிளிநொச்சி மாவட்டத்தில் 13இடைத்தங்கல் நிலையங்களில் 320 குடும்பங்களைச் சேர்ந்த 910பேர் தங்கியுள்ளனர்.

அவர்களுக்கு மாவட்ட தொற்று நோய் மற்றும் தொற்றா நோய்ப்பிரிவின் மருத்துவர் க.ரஞ்சன் தலைமையில் சிகிச்சை அளிக்கப் பட்டது.

வெள்ள இடருக்குள்ளான மக்கள் பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறை தொடர்பாகவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. (ச-113)




தவிச்ச வாய்க்கு தண்ணிகுடுக்காமல், அவிச்ச மீன் எங்க போட்டுது எண்டு தேடிக்கொண்டிருந்தால் எப்பிடி இருக்கும்? அப்பிடித்தான் எங்கட ஆக்களின்ர வெள்ள நிவாரணக் கூட்டங்கள் இருக்குது. இந்தமுறை நவம்பர் கடைசியில கடும் மழை இருக்குமெண்டு ரண்டு, மூண்டு கிழமைக்கு முதலே அறிவிப்புகள் வரத்தொடங்கிட்டுது. காற்றுச் சுழற்சி ஒண்டு உருவாகி இருக்கிறதாயும், அது புயலா மாறச் சந்தர்ப்பம் இருக்கெண்டும், அப்பிடி புயலா மாறாட்டியும் கடும் மழை பெய்யும் எண்டும் வானியல் ஆய்வாளர்மார் சொல்லிக்கொண்டே இருந்தவை. அதால மழை வெள்ளம் வந்தால், அதில இருந்து எப்பிடி மீள்றது, ஆக்களைக் காப்பாத்துறது எப்பிடி, என்ன வகையில நிவாரணங்கள் குடுக்கிறதெண்டெல்லாம் இந்தமுறை கொஞ்சம் முதலே ஏற்பாடு பண்ணியிருந்தவை. ஆனால் எல்லாரும் நினைச்சதை விடவும் கடும்மழை பொழிய, போட்டு வைச்ச தடுப்புத் திட்டமெல்லாம் வெள்ளத்தோட வெள்ளமாப் போகத் தொடங்கிட்டுது.

எங்க பார்த்தாலும் வெள்ளம். முந்தி வெள்ளம் வராத இடங்களில கூட, இந்தமுறை கழுத்தளவு தண்ணியெல்லாம் வந்து சனத்தை திக்குமுக்காடப் பண்ணிப்போட்டுது. எண்டாலும் எங்கட சனத்துக்கு சண்டைக்காலத்தில இடம்பெயர்ந்து பழக்கமிருந்ததால முக்கியமான சில சாமான்களோட பக்கத்தில இருக்கிற பாதுகாப்பான இடங்களுக்குப் போய் இருந்திட்டினம். பள்ளிக்கூடங்கள், கோயில்கள், தேவாலயங்கள் எண்டு திடீர் அகதிமுகாம்கள் எல்லா இடமும் முளைக்கத்தொடங்கிட்டுது. இந்த வெள்ளப்பாதிப்பால கன இடங்களில றோட்டால வாகனங்களே போக ஏலாத நிலைமை. அந்தளவுக்கு வெள்ளம் றோட்டையும் மேவி நாலைஞ்சு அடிக்கு சீறிக்கொண்டு பாய்ஞ்சது. இப்பிடி சனங்கள் வெள்ளத்தால அல்லோலகல்லோலப்பட்டு, அகதியளா மாறி பொது இடங்களில தங்கியிருக்கேக்க, அரசாங்கமும், அதிகாரிமாரும் முதலில என்ன செய்திருக்கோணும்? அங்க தங்கியிருக்கிறவைக்கு எப்பிடி சாப்பாடு குடுக்கலாம், மலசலகூட வசதியளை எப்பிடிச் செய்யலாம், வெள்ளத்தை வடியவைக்க என்ன வழி இருக்கு? எண்டு ஆராஞ்சு நல்லமுடிவுகளைக் கண்டுபிடிச்சு, அதை நடைமுறைப்படுத்துறதானே அவையின்ர வேலை.

ஆனால் வெள்ள அனர்த்தக் கூட்டமெண்டு கச்சேரியில கூடிப்போட்டு, எல்லாரும் இப்பத்தை வெள்ளத்துக்கு அஞ்சுசதமும் சம்பந்தமில்லாத ஏதேதோ கம்பிகட்டிற கதையளைத்தான் கதைச்சுக் கொண்டிருக்கினம். "ஒரு இடத்தில இப்பத்தை வெள்ளத்துக்கு காரணம் அஞ்சு வருசத்துக்கு முதல் அங்க கட்டின பாலம் தான். அதை ஒழுங்காக் கட்டியிருந்தால் அந்த ஏரியாவில இப்பிடி தண்ணி போயிருக்காது" எண்டு ஒருத்தர் சொல்லியிருக்கிறார். "அப்பிடியில்லை அது கட்டினது சரிதான்" எண்டு இன்னொருத்தர் மறுத்தான் அடிச்சிருக்கிறார். இப்பிடி உடன என்ன தேவையோ அதைப்பற்றிக் கதைக்காமல், சனங்கள் வெள்ளத்துக்க அவதிப்பட்டு அன்னம், தண்ணியில்லாமல் இருக்கேக்க அதுகளைக் குடுக்கிற வழியளை யோசிக்காமல் ஆளையாள் மாத்தி மாத்தி பழி சுமத்தி விளையாடியிருக்கினம் அந்தக் கூட்டத்தில. அதைவிட இன்னும் சிலர் "நாங்கள் நிஷா வரேக்க அப்பிடிச்செய்தம், சுனாமி வரேக்க இப்பிடிச் செய்தம்" எண்டு சுயபுராணம் பாடி நேரத்தைப் போக்காட்டியிருக்கினம். இப்பிடி சுயபுராணம் பாடவும், பழி சுமத்தி விளையாடவும் தான் கூட்டமெண்டால் அதை வைக்காமலே விட்டிருக்கலாமே. என்ன நோக்கத்துக்காக கூட்டத்தை வைக்கினமோ அதுகளை விட்டிட்டு, தேவையில்லாததுகளைப் பேசி, பேய்க் காட்டி பழகினவை இப்பவும் அப்பிடித்தானே இருப்பினம்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். தந்தை வழியில் செலவுகள் ஏற்படக்கூடும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்புண்டு. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உறவினர்களால் ஆதாயம் ஏற்படும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். சக ஊழியர்கள் இணக்கமாக நடந்துகொள்வார்கள்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகளை காலையிலேயே தொடங்கி விடுவது நல்லது. எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தருவதாக அமையும். காரியம் இழுபறிக்குப் பிறகு அனுகூலமாகமுடியும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வாழ்க்கைத்துணையின் தேவைகளை நிறைவேற்றுவதில் சிறிது அலைச்சல் ஏற்படும். சங்கடங்கள் ஏற்படும். குடும்பத்துடன் கோயிலுக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்படும்.

**சிம்மம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். உடல்நலனில் சற்று கவனம் தேவைப்படும் நாள். தாயின் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். விற்பனையும் லாபமும் அதிகரிக்கும்.

**கன்னி:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முடிவுகளைத் தெளிவாகச் சிந்தித்து எடுப்பீர்கள். இளைய சகோதரர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். சிலருக்கு எதிர்பார்த்த சுபச் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** மகிழ்ச்சி தரும் நாளாக அமையும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், புதிய முயற்சிகளைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். வியாபாரத்தில் பணியாளர்களால் செலவுகள் ஏற்படும்.

**விருச்சிகம்:** காரியங்கள் முடிவதில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டு நீங்கும். மனதில் அடிக்கடி சோர்வு ஏற்பட்டு விலகும். தாய்வழி உறவினர்களுக்காக செலவு செய்ய நேரிடும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** அதிர்ஷ்டகரமான நாள். எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். கருத்து வேறுபாடு விலகி அந்நியோன்யம் அதிகரிக்கும். உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

**மகரம்:** உற்சாகமான நாளாக இருக்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். ஆனால், சகோதர வகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். சிலருக்கு எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு ஏற்படும். கருத்துவேறுபாடு நீங்கி ஆதரவும் கிடைக்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண் விவாதம் செய்வதை கண்டிப்பாகத் தவிர்க்கவும். மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். தந்தையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. பொறுமை அவசியம்.

**மீனம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது. இன்று எந்த விடயத்திலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். மற்றவர்கள் விவாதம் செய்ய வந்தால் விலகிச் செல்வது நல்லது. சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

## சேற்றில் சிக்கிய யானை மீட்பு



வவுனியா, நவ.30

வவுனியா குடகச்சகொடியா வயல்வெளியிலுள்ள சேற்றுக்குள் வீழ்ந்து சிக்கிக் கிடந்த யானை ஒன்று வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களால் மீட்கப்பட்டுள்ளது.

கிராம மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே குறித்த யானை மீட்கப்பட்டுள்ளது.

மோசமான காலநிலை காரணமாக உணவு தேடிச் சென்ற வேளையில் சேற்றுக்குள் சிக்கியிருக்கலாம் என வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். (ச-110)

## கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், நவ.30

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியில் 2025 ஆம் ஆண்டுக்கான சான்றிதழ் தர (என்.வி.கியூ. மட்டம் 3,4) மற்றும் டிப்ளோமா தர (என்.வி.கியூ. மட்டம் 5,6) கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

முழு நேரக்கற்கை நெறிகள் இலவசமானவை. தரம் - 10 தகைமை உடையோர் முதல் க.பொ.த. உயர்தர தகைமை உடையோர் வரை கற்கக் கூடிய கட்டட நிர்மாணத்துறை, தன்னியக்க இயந்திரவியல், மின் மற்றும் இலத்திரனியல், வர்த்தகம் மற்றும் மொழித்துறை, கணினிசார், தொலைத்தொடர்பு தொழில்நுட்பவியல் போன்ற துறைகள் சார்ந்த 50 இற்கும் மேற்பட்ட கற்கை நெறிகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ற்கைநெறியைப் பயில விரும்பும் தகுதியுடையோர் பணிப்பாளர், தொழில்நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம் எனும்முகவரிக்கு விண்ணப் பிக்கலாம். மேலதிக விவரங்களை dtet.gov.lk எனும் இணையத்தளத்தில் பார்வையிடலாம். அத்துடன் தொழில்நுட்பக் கல்லூரியின் தொழில் வழிகாட்டல் நிலையத்துடன் நேரடியாகவோ அல்லது 0212212403, 0212220028 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவோ பெற்றுக்கொள்ளலாம். (ச-33)



## மாவீரர் குட்டியின் நினைவிடத்தை சேதப்படுத்திய விஷமிகள்!

யாழ்ப்பாணம், நவ.30

நவாலி கிழக்கு, பிரசாத் சந்திக்கு அருகாமையில் அமைக்கப்பட்ட குட்டி என்று அழைக்கப்படும் சின்னத்தம்பி பரமேஸ்வரனின் நினைவாலயம் அண்மையில் விஷமிகளால் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

இவர் கடந்த 1985ஆம் ஆண்டு வீரச்சாவடைந்த நிலையில் அவரது நினைவாலயம் மேற்குறித்த பகுதியில் அமைக்கப்பட்டிருந்தது. (ச-4527)

## யாழ். போதனாவின் சேவைகள் வழமைக்கு

யாழ்ப்பாணம், நவ.30

வெள்ள நிலைமை தற்போது சீரடைந்து வருவதால் நேற்று வெள்ளிக்கிழமை முதல் யாழ். போதனா மருத்துவமனையின் அனைத்துச் சேவைகளும் வழமை போன்று நடைபெறுமென யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்த கன மழையினால் யாழ். போதனா மருத்துவமனையின் ஒரு பகுதி நீரில் மூழ்கியது. அந்தப் பகுதியில் வழங்கப்பட்ட சேவைகள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுத் தற்போது சேவைகள் வழங்கப்படுகின்றன.

ஓரிரு நாள்களில் மீண்டும் அதே பகுதிகளில் சிகிச்சைகள் வழமைக்குக் கொண்டு வரப்படும்.

வெள்ள அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்படுகின்ற நோயாளிகளுக்கும் தற்போது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-25,66)



சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் வரணிப் பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவிப்பொருள்களை நேற்று வெள்ளிக்கிழமை வழங்கிவைத்தனர். (ச-25, 45-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## பட்டுணர்ந்தும் புத்தியில்லை!

வடமாகாணத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பேரிடரைத் தொடர்ந்து, இங்குள்ள சட்டவிரோதக் கட்டடங்களை இடித்து அகற்றவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கின்றார் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன். இந்த விடயத்தில் தொடர்ச்சியாகப் பேசிக்கொண்டிருப்பதில் எந்தப் பயனும் இல்லை என்றும் அவர் அதிகாரிகளை அறிவுறுத்தியிருக்கின்றார். உண்மைதான், மிக விரைவாகவும் போர்க்கால அடிப்படையிலும் தீர்வு காணப்படவேண்டிய விடயம் இது. வடக்கில் கடந்த 30 வருடங்களுக்கு முன்னர் காணப்பட்ட வடிகால்கள், குளங்கள், நீரேந்துப் பகுதிகள் தற்போதும் காணப்படுகின்றனவா? என்றால் இல்லை என்பதுதான் அதற்குரிய பதில். காலவோட்டம் அனைத்தையும் மாற்றியிருக்கின்றது. எங்கும் கட்டடக் காடுகள்தான் எஞ்சியிருக்கின்றன. குளங்கள் மணல் மேடுகளாக்கப்பட்டு தற்போது குடியிருப்புகளாக மாற்றம் பெற்றிருக்கின்றன. அரச காணிகளும், அதற்கு அருகிலிருந்த ஏராளம் குளங்களும் காணாமற்போயிருக்கின்றன. வெள்ளம் வடிந்தோடுவதற்கு ஏதுவாக இருந்த பகுதிகளைக் கட்டடக்காடுகளாக்கினால் வெள்ளம் எங்குதான் செல்வது? உண்மையில் வெள்ளம் வீடுகளுக்குள்ளோ அல்லது கட்டடங்களுக்குள்ளோ வருகின்றது என்று பொருளல்ல. அதன் பாதையை நாம்தான் அடாத்தாக அடைத்தும் - பிடித்தும் - ஆக்கிரமித்தும் வைத்திருக்கின்றோம்.

2008ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் நிஷா புயல் வடக்கைத் தாக்கியது. பேரிடராக அது மாறியது. பாடசாலைகள், மருத்துவமனைகள், பொதுக்கட்டடங்கள் என்பன இடைத்தங்கல் முகாம்களாகின. வெள்ளம் விரைவாக வடிந்தோட முடியாத நிலை ஏற்பட்டது. அப்போதும், வடக்கு ' வெள்ள வாய்க்கால்கள் சீர்ப்படுத்தப்படவேண்டும், சட்ட விரோதக் கட்டடங்கள் அகற்றப்படவேண்டும், குளங்களை மேவி அமைக்கப்பட்டுள்ள கட்டுமானங்கள் அப்புறப்படுத்தப்படவேண்டும்'என்றெல்லாம் வலியுறுத்தல்கள் பல தரப்புகளால் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், நடைமுறையில் எதுவும் சாத்தியமாகவில்லை. குறைந்த பட்சம் நிஷா புயலால் பாதிக்கப்பட்ட பின்னர், அதாவது 2008ஆம் ஆண்டுக்கும் 2024ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இருந்த நீரேந்துப் பகுதிகளைப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தினால் எவ்வளவுதூரம் ஆக்கிரமிப்பு எம்மை மேவியிருக்கின்றது என்பதை உய்த்துணர்ந்து கொள்ளலாம்.

சட்டவிரோதக் கட்டடங்களை அகற்றுவது மாற்றுக் கருத்தின்றி வரவேற்கப்படவேண்டிய விடயம். ஆனால், அதற்குரிய சட்ட ஏற்பாடுகள் மிக மந்தமானவையாக இருக்கின்றன. நீண்ட சட்டப்போராட்டங்களை இதற்காக மேற்கொள்ளவேண்டியிருக்கின்றது. கிட்டத்தட்ட பத்துக்கும் மேற்பட்ட மழைக்காலக் காத்திருப்பாக இந்த விவகாரம் மாறிக்கொண்டிருக்கின்றது. எனவே, சட்டவிரோதக் கட்டுமானங்களை அகற்றவேண்டும் என்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினால் மட்டும் போதாது. அதற்குரிய சட்டப்பிடிமானங்களை - ஏற்பாடுகளை இலகுபடுத்திக் கொடுப்பதற்கும் ஆளுநர் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆளுநர் ஜனாதிபதியின் நேரடிப் பிரதிநிதி என்ற வகையிலும், வடக்கில் ஓர் அமைச்சர் இருக்கின்றார் என்ற அடிப்படையிலும், தனிப்பெரும்பான்மை உள்ள நாடாளுமன்றத்தில் இதற்குரிய சட்ட ஏற்பாடுகளை மிகவும் இலகுவாக ஏற்படுத்திக் கொள்ளலாம்.

சட்டவிரோதக் கட்டடங்கள் மட்டுமல்ல, வீடுகளின் முற்றங்கள் தற்போது முழுமையான கொங்கிறீட்களால் மூடப்படுகின்றன. மேற்கத்தேய அடுக்குமாடிக் குடியிருப்புக் கலாசாரத்தை எம்மவர்கள் பிரதியெடுத்துக்கொண்டிருக்கின்றனர். அங்கு குடிதண்ணீர் குழாய்களில் வரும். இங்கு அப்படியல்ல. இங்கு மழைநீர் ஊறி நிலத்தடியைச் சென்றடைந்தே குடிநீராக மாறுகின்றது. எனவே, வீடுகளின் முற்றங்களை கொங்கிறீட்களால் நிறைப்பதோ அலங்காரக் கற்களை அடுக்கிச் செல்வதோ தகாது. சட்டவிரோதக் கட்டடங்களுக்கு நிகரான ஆபத்துடைய விடயம் இது. இந்த விடயத்திலும் அதிகாரத்துடனும் - அவதானத்துடனும் செயற்படவேண்டும். மழை நீரே மனித இருப்பு. அதை சபிக்கத்தக்க வகையில் மாற்றாதிருப்பது சமூகப் பொறுப்பு.



செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111

செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


### நாளொரு நல்வார்த்தை

அறச்செயல்களின் மொத்த வடிவம் மரமே. கைமாறு கருதாது, நமக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் வாரி வழங்குபவை மரங்கள்தான். தன்னை வெட்டுபவனுக்கும் கூட நிழலாய் இருந்து அவனைக் காப்பது மரங்களே!

– கௌதம புத்தர்





## எலிக்காய்ச்சல் உயிராபத்தே!

கொழும்பு, நவ. 30

எலிக்காய்ச்சலுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படாவிட்டால் சிறுநீரகம், இதயம் மற்றும் மூளை ஆகிய உறுப்புகள் செயலிழந்து மரணம் கூட ஏற்படலாம் என மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் கபில கன்னங்கர எச்சரித்துள்ளார்.

2023 இல் எலிக்காய்ச்சலால் 1,400 பேர் பாதிக்கப்பட்டிருந்தது டன், 2024 இல் அந்த எண்ணிக்கை ஆயிரத்து 882 ஆக அதிகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## பயிர்ச்சேதம் நிவாரணம்

கொழும்பு, நவ. 30

கடும் மழையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கும் வேலைத்திட்டம் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக, விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

நட்டஈடு வழங்கும் நடவடிக்கையில், நெல், சோளம் போன்ற பயிர்களை மாத்திரம் வழங்கும் முறையை மாற்றி, இம்முறை மழையினால் சேதமடைந்த ஏனைய பயிர்களை பயிரிட்ட விவசாயிகளுக்கும் இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் பிரதியமைச்சர் தெரிவித்தார். (ச-இ)





## ஏலத்தில் விடப்படும் அரச வாகனங்கள்

கொழும்பு, நவ. 30

அமைச்சுகளுக்குச் சொந்தமான சுமார் 254 அதிசொகுசு வாகனங்களை ஏலத்தில் விடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அமைச்சரவை, அரசாங்க மதிப்பீட்டாளரின் சான்றிதழைப் பெற்று சொகுசு வாகனங்கள் ஏலம் விடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகப் பொதுப் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். (ச-இ)

## யாழ்.ராணி சேவை நிறுத்தம்

கொழும்பு, நவ. 30

யாழ்.ராணி சேவை மறு அறிவித்தல்வரை நடைபெறாது என புகையிரதத் திணைக்கள வட்டாரங்கள் அறிவித்துள்ளன. இயந்திரம் பழுதடைந்து அநுராதபுரத்தில் நிற்பதால் இந்தச் சேவையை நடத்தமுடியாதிருப்பதாக பிராந்திய புகையிரத முகாமையாளர் அறிவித்துள்ளார்.

அதனை இரத்மலானைக்கு அனுப்பியே சீர்செய்யமுடியும் என்றும், அதற்கு எத்தனை நாள் எடுக்கும் எனக் கூறமுடியாது எனவும் அவர் கூறினார். (ச-இ)

## திருமணம் செய்தால் வீடு

கொழும்பு, நவ. 30

எதிர்காலத்தில் திருமணம் செய்துகொள்ளும் அனைத்து தம்பதியினருக்கும் வீடு வழங்கப்படவேண்டும் என வீடமைப்பு பிரதி அமைச்சர் ரீ.பி. சரத் தெரிவித்துள்ளார்.

வீடுகள் இல்லாத காரணத்தினால் திருமணம் செய்வது காலம் தாழ்த்தப்படுவதாகவும் அவ்வாறான ஒரு நிலைமை இனி நீடிப்பதற்கு இடமளிக்கப்படாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

### நாளை

ஞாயிற்றுக்கிழமை - கார்த்திகை - 16

01.12.2024

சுபநேரம் : 09.14 - 10.44

ராகுகாலம் : 04.44 - 06.14


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுக்கு அனுப்புவதாக ரஷ்யப் படைக்கு ஆட்சேர்ப்பு

## வடக்கிலுள்ள உறவினர்கள் கதறல்

**யாழ்ப்பாணம், நவ. 30**

**பிரான்ஸ் நாட்டுக்கு அழைத்துச் செல்வதாக தெரிவித்து ரஷ்ய இராணுவத்துக்கு எமது உறவுகளை மனித விற்பனை செய்துள்ளார்கள். ரஷ்யா - உக்ரைன் போரில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்ட நிலையில் காயமடைந்துள்ளதாக பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.**

யாழ்.ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து ஊடகங்களுக்கு அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இதன்போது முல்லைத்தீவைச் சேர்ந்த சு.பாலசந்திரன் என்பவரின் மனைவி தெரிவிக்கையில்,


நானும் எனது கணவரும் தையல் தொழிலில் ஈடுபட்டு வந்தோம். பிரான்ஸ் நாட்டுக்குச் செல்ல இராணுவம் போல விசாவில் சென்று பிரான்ஸுக்குச் செல்லமுடியும் என முகவர் ஒருவர் தெரிவித்தபோது ஆரம்பத்தில் மறுப்புத் தெரிவித்த பொழுதிலும் அவர்களின் ஆசை வார்த்தையை நம்பி எனது கணவர் பயணமானார். ரஷ்யா விமான நிலையத்தில் எனது கணவரை ரஷ்ய இராணுவ கொமாண்டர் அழைத்துச் சென்றார். இராணுவப் பயிற்சியில் ஈடுபடுத்தி தற்பொழுது உக்ரைன் போரில் எல்லையில் எனது கணவர் காயமடைந்துள்ளார். எனவே எனது கணவரை மீட்டுத் தாருங்கள் - என்றார்.

கரவெட்டியைச் சேர்ந்த 21 வயதுடைய சுஜனிகாந் பகீரதனின் தாயார் தெரிவிக்கையில்,

எனது மகனை எனது ஒன்றுவிட்ட சகோதரனே பிரான்ஸுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து எடுத்திருந்தார். எனது மகன் ரஷ்யாவில் தரையிறக்கப்பட்டு தற்பொழுது போரில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். எனது மகனை மீட்டுத் தாருங்கள் என கதறினார்.

யாழ்ப்பாணம் இராஜேந்திரவீதியைச் சேர்ந்த 25 வயதுடைய அதிஷ்டராஜ் மிதுசனின் தந்தை, எனது ஆதனத்தை விற்று எனது மகனை பெல்ஜியத்தில் உள்ள முகவர் மூலம் பிரான்ஸுக்கு கடந்த மாதம் அனுப்பினேன். ஆனால் இன்று எனது மகனும் ரஷ்யாவில் கட்டாய ஆட்சேர்ப்பின் மூலம் போரில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். எனது மகன் எனக்குத் தேவை என தெரிவித்தார்.

குறித்த உறவினர்கள் வடமாகாண ஆளுநர் மூலம் ஜனாதிபதிக்கும், வெளிவிவகார அமைச்சருக்கும், ரஷ்ய துணைத்தூதுவருக்கும் மனுவொன்றை அனுப்பி தமது உறவுகளை மீட்டுத்தர சம்பந்தப்பட்ட தரப்புகள் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-125,27)



# கன்ரர் விபத்தில் ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், நவ. 30

கன்ரர் ரக வாகனம் பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்த நிலையில் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலங்குளாய் சனசமூக நிலையம் முன்பாக இந்த விபத்து நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

இலங்கை மின்சார சேவை சுன்னாகம் கிளையின் கன்ரர் ரக வாகனமே விபத்துக்குள்ளாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-63)



# வெள்ள இடரை எதிர்நோக்க சிறந்த கட்டமைப்பு தேவை

## *யாழ்.மாவட்ட பதில் செயலர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், நவ. 30

எதிர்வரும் காலங்களில் வெள்ளப் பாதிப்பு ஏற்படாத வகையில் துறைசார்ந்தவர்களின் ஆலோசனைகளையும் சாதாரண மக்களின் கருத்துகளையும் உள்வாங்கி சிறந்த முறையில் கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாவட்ட பதில் செயலர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் மற்றும் துறைசார் திணைக்கள அதிகாரிகளுடன் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது ஏற்பட்டுள்ள வெள்ளப் பாதிப்புக்கு வடிகால்கள் சிறந்த நிலையில் இல்லாமையே காரணம் என்றும் வடிகாலமைப்புச் செயற்பாடுகள் சிறந்த முறையில் அமையவேண்டும் எனவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

அதற்கமைய துறைசார்ந்தவர்களின் ஆலோசனைகளையும் மக்களின் கருத்துகளையும் கூட உள்வாங்கி சிறந்த முறையில் கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம் என யாழ்.மாவட்ட பதில் செயலர் தெரிவித்தார். அத்துடன் தற்போது அவசரமாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராய்ந்தார். (ச-26)

# முத்துஐயன்கட்டுக்குளம் வான்கதவுகள் திறப்பு

கிளிநொச்சி, நவ.30

கிளிநொச்சி முத்துஐயன் கட்டுக்குளத்தில் நீர்வரத்து அதிகமாகி வருவதால் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய குளத்தின் கரையோரங்களிலுள்ள மக்கள் மிக அவதானமாக இருக்கும்படி கமநலசேவை நிலையம் தெரிவித்துள்ளது. அத்துடன் ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலையத்தின் கீழ் உள்ள சிறுகுளங்கள் யாவும் நீர்நிரம்பி உள்ளதால் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. (ச-33-500)



# பனைவீழ்ந்து படகு சேதம்

யாழ்ப்பாணம், நவ. 30

ஊர்காவற்றுறை எழுவைதீவில் கடும் காற்றால் பனை மரம் முறிந்து மின்கம்பத்தில் வீழ்ந்ததில் மின்கம்பம் சரிந்து கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகு மீது வீழ்ந்ததில் படகு முழுமையாகச் சேதமடைந்துள்ளது. (ச-9)

# தியாக தீபம் தூபியில் மாவீரர் நாள் நினைவு

யாழ்ப்பாணம்,நவ.30

மாவீரர் நாள் நினைவேந்தல் நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத்தூபியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் பொதுச்சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.


அத்துடன் தியாகி திலீபனின் நினைவுத்தூபி அருகில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவாலயம் முன்பாகவும் சிவாஜிலிங்கம் தலைமையிலான நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது. (ச-33-20)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட நல்லூர் சங்கிலியன் தோப்பு மற்றும் குரு நகர் தொடர்மாடிக் குடியிருப்புப் பகுதி மக்களுக்குச் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ. மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் கடந்த புதன்கிழமை சமைத்த உணவுகள் வழங்கி வைக்கப்பட்டன. (ரி-66)



# ஆலயத்தின் மீது வீழ்ந்தது அரசமரம்

யாழ்ப்பாணம், நவ.30

நவாலி கிழக்கு ஜே/135 கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஞானவைரவர் ஆலயத்துக்கு அருகாமையில் நின்ற 250 ஆண்டுகள் பழமையான அரசமரம் கடந்த புதன்கிழமை வீசிய பலத்த காற்றினால் ஆலயத்தின் மீது சரிந்து வீழ்ந்துள்ளது.

இதனால் கோயில் முழுமையாக சேதமடைந்தது. குறித்த மரத்தை வெட்டி அகற்றும் நடவடிக்கையில் ஊர் மக்கள் ஈடுபட்டனர். (ச-45-27)



# மருதங்கேணிப் பாலம் உடைப்பெடுப்பு தடுப்பு

யாழ்ப்பாணம், நவ. 30

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தை குடாநாட்டின் ஏனைய பகுதிகளுடன் இணைக்கும் ஒரேயொரு போக்குவரத்து மார்க்கமாக இருக்கும் மருதங்கேணி பாலம் உடைந்துவிழும் அபாய நிலை ஏற்பட்டிருந்த நிலையில் அதனைச் சீரமைக்கும் பணிகள் நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டன.

தற்போது பெய்துவரும் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் குறித்த பாலத்தில் உடைப்பெடுக்கும் அபாய நிலை தோன்றியது.

அதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் மண் அரிப்பு ஏற்பட்ட இரு பகுதிகளிலும் மணல் மூடைகளை அடுக்கும் பணியை முன்னெடுத்தனர்.

அத்துடன் இந்தப் பாலத்தின் ஊடாக கனரக வாகன பயன்பாட்டை மட்டுப்படுத்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதாகவும் மருதங்கேணி பிரதேச செயலாளர் கே.பிரபாகரமூர்த்தி தெரிவித்துள்ளார். (ச-27-100)

# யாழ்.இடைத்தங்கல் முகாம்களில் 436 குழந்தைகள்

யாழ்ப்பாணம், நவ.30

யாழ். மாவட்டத்தில் 5 வயதுக்குட்பட்ட 436 குழந்தைகள், 71 சிசுக்கள் மற்றும் 49 கர்ப்பிணித் தாய்மார் ஆகியோர் 68 இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். இவர்களுக்கான சுகாதார வசதிகள் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியினூடாகவும் குடும்பநல சேவை உத்தியோகத்தர்களூடாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-125)



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீர்வேலி தெற்கு முருகையா கோயில் அடியாளர்களின் உதவியுடன் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டன. அச்செழு, இளவாலை, கந்தரோடை, கைதடி, வாதரவத்தை போன்ற பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கே இந்த சமைத்த உணவு வழங்கி வைக்கப்பட்டது. (ச-17)

# யாழ். மாநகரத்தில் வடிகால்கள் துப்புரவு

யாழ்ப்பாணம், நவ.30

யாழ். மாநகரப் பிரதேசத்தில் உள்ள வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்பட்டு வெள்ளத்தை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

யாழ். மாநகர ஆணையாளரின் மேற்பார்வையில் மாநகரசபைத் தொழிலாளர்களால் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதனால் நல்லூரில் தேங்கிய வெள்ளம் வடிந்தோடி தற்போது போக்குவரத்து சீராகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-25. 17)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் கந்தன் திருமணசேவை

ஆண் (V) 1981 செவ்வாய் உண்டு சமுர்த்தி உத்தியோகத்தர். இவருக்கு பொருத்தமான மணமகள் தேவை மற்றும் எல்லா இனம், மதம் சார்ந்த மணமக்கள் எம்மிடம் உண்டு.

தொடர்பு: வி.ஜெயந்தி
**077 973 3183**



## வீடு வாடகைக்கு

கச்சேரி, நல்லூர் வீதியில் அமைந்துள்ள வீடு குறுகிய கால அடிப்படையில் பணியாளர்கள், மாணவர்கள் குழுவாக தங்குவதற்கு வழாங்கப்படும். தொடர்பு:
**075 9799 161 / 0777 699 212**


## வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி உப அலுவலகம்
## ஆதனப்பெயர்மாற்ற அறிவித்தல்

**விண்ணப்பதாரர் நாகராசா கமலகாசன்**

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி உப அலுவலகத்திற்கு உட்பட்ட முனியப்பர் கோவில் வீதி என்னும் முகவரியில் அமைந்துள்ள கட்டுவன் இறை "பெரிய சீமா" என்ற ஆதனம் ஆதனப்பதிவேட்டில் வட்டாரம் 16, ஆதன இலக்கம் 150 முனியப்பர் கோவில் வீதியில் அமைந்துள்ளது.

குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் திருமதி கார்த்திகாதேவி சுந்தரேஸ்வரசர்மா முகதாவில் உறுதி இலக்கம் 82ம் இலக்கத்தில் 2021-02-15 அன்று நிறைவேறிய நன்கொடை உறுதியின் பிரகாரம் குறித்த நாகராசா கமலகாசன் சொந்தமும் உரிமையுமாய் இருந்து வந்தது

**ஆதன விபரம்**

"வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி கோவிற்பற்றும் கட்டுவன் இறையும் நிலப்பரப்பு 03 இது இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் A.அதீதன் அவர்களின் வரைபட இலக்கம் 0128 இன்படி துண்டு 1 ஆகும்.

**எல்லைகள்**

கிழக்கு : நாகராசா இதயதாஸ்
வடக்கு : சிறீஸ்கந்தராசா மகள் மாலினி
தெற்கு : வீதி
மேற்கு : தர்மதாஸ் பெண் கோகுலவதனி

மேற்குறித்த ஆதனத்தை நாகராசா கமலகாசன் என்னும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல" என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை**
**காங்கேசன்துறை.**

(CS/1943) J-1

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமக

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 27 . 03 . 2000



**மறைவு** 05 . 10 . 2024

## ஸ்ரீஸ்கந்தராசா யதுர்சன்

159, ஸ்கந்தபுரத்தை பிறப்பிடமாகவும், ஆசாரி வீதி கோப்பாய் மத்தி, கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீஸ்கந்தராசா யதுர்சன் அவர்கள் கடந்த 05.10.2024 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் ஸ்ரீஸ்கந்தராசா மற்றும் சரோஜினிதேவி தம்பதியரின் அன்பு மகனும், தனுசன், ரனுஷிகா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கருணாகரன் சரோஜினிதேவி, அமிர்தலிங்கம் (ராமு), சத்தியதேவி (கோப்பாய்) ஆகியோரின் அன்பு மருமகனும், காந்தரூபன் கௌசலா (பிரான்ஸ்) பெறாமகனும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை, சிவமலரின் அன்பு மருமகனும், பாலசுப்பிரமணியம் இலங்கைநாயகி, காலஞ்சென்ற சத்தியகுணசேகர் ஜெயலட்சுமி, காலஞ்சென்ற குகேந்திரன் உதயகுமாரி ஆகியோரின் அன்பு பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.12.2024) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**

| | | | |
|---|---|---|---|
| ஆசாரி வீதி | அமிர்தலிங்கம் (ராமு) | - 076 234 5670 | கோப்பாய் |
| கோப்பாய் மத்தி | காந்தரூபன் | - 0033 661 659 962 | பிரான்ஸ் |
| கோப்பாய். | சரோஜினிதேவி (அம்மா) | - 076 235 4639 | |

(CS/1945) J-1

# வெளிச்சக்திகளுக்கு அடிபணியக்கூடாது
## சீனா 'அட்வைஸ்'



கொழும்பு, நவ. 30

வெளிச்சக்திகளின் அழுத்தங்களுக்கு இலங்கை அடிபணியக்கூடாது சுயாதீன வெளி விவகார கொள்கையைபின்பற்றவேண்டும் என இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் ஜென்ஹாங் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு வெளிநாடுகளின் உலக நாடுகளின் உதவி அவசியம் என சில உலக நாடுகள் இலங்கைக்குத் தெரிவித்துள்ளன. இது தவறான கருத்து. இலங்கை மக்கள் தங்களை குறித்து நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கவேண்டும். இலங்கையைப் பொறுத்தவரை சீனாவுக்குத் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் இல்லை.

சீனாவின் உதவி இலங்கை சுதந்திரமான நாடாக மாறுவதற்கும் வெளிச்சக்திகளின் அழுத்தங்களை எதிர்கொள்வதற்கும் உதவும் - என்றார். (ச-இ)


## மணப்பெண் தேவை

1. சுண்டுக்குழி, இந்து, கௌரவ குலம் (V), 1987, திருவோணம், BA (Hons), Business Management, CIMA, UK Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண்தேவை - 43625.
2. குப்பிளான் - கொக்குவில், இந்து, கௌரவ குலம் (V), 1990, கேட்டை, Phd, Director, கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை - 46762.
3. நெல்லியடி, இந்து, கௌரவ குலம் (V), 1991, பூராடம், HND, (Jaffna University), USA citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
4. காரைநகர் - கோப்பாய், இந்து, கௌரவ குலம் (V), 1992, பூரம், BSc Engineering, Canada மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
5. நீர்வேலி - இந்து, கௌரவ குலம் (V), 1989, சுவாதி, Phd, South Korea citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
6. யாழ்ப்பாணம் - இந்து, கௌரவ குலம் (V), 1986, மகம், MSc, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
7. புலோலி, இந்து, கௌரவ குலம் (V),1982, சுவாதி, BSc Engineering, Australia citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
8. கரவெட்டி - புங்குடுதீவு, இந்து, கௌரவ குலம் (V), 1989, மிருகசீரிடம், BSc, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

**www.thaalee.com** **போன்-077 539 3723**
**திருமண சேவை** **Whatsapp-077 8038 193**

(CS 1949) A-1


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### கேள்வி அறிவித்தல்

கீழ்க்காணும் உணவகங்களை நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் பணிமனையில் 16.12.2024 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| பிரதான உணவகம் - I | திருநெல்வேலி |
| முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட உணவகம் | கலாசாலை வீதி, திருநெல்வேலி. |
| மருத்துவ பீட உணவகம் | திருநெல்வேலி |
| மருத்துவ மாணவர் விடுதி உணவகம் | யாழ்ப்பாணம் |
| கோண்டாவில் மாணவர் விடுதி உணவகம் | கோண்டாவில். |
| சேர்.பொன்.இராமநாதன் அலைகாற்று மற்றும் காண்பிய பீட உணவகம் | மருதனார்மடம் |
| ஆனந்தகுமாரசுவாமி மாணவர் விடுதி உணவகம் | திருநெல்வேலி |
| சித்த மருத்துவ பீட உணவகம் | கைதடி |

மீளளிக்கப்படும் கேள்விவைப்பு பணமாக ரூபா 2000/=இனை மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 97000060000268 இற்கும். மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 500/= இனை தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 97000060000276 இற்கும் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுகளினை சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி ஊடாகவோ (தொலைபேசி இல 0212226716) பெற்றுக் கொள்ளலாம்.

**பதிவாளர்**

(CR/43803) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுதிமொழிகள் பற்றி தெளிவுபடுத்தவில்லை

## ஐக்கிய சோசலிசக் கட்சி சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 30

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை மற்றும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்பன தொடர்பில் தனது கொள்கை விளக்க உரையில் ஜனாதிபதி ஏன் தெளிவுபடுத்தவில்லை. இது தொடர்பில் உரிய விளக்கம் அவசியம் என்று ஐக்கிய சோசலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தி உறுதியளித்திருந்தது. எனினும், ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் அது பற்றி ஒரு வார்த்தையேனும் கூறப்படவில்லை. அத்துடன், தேசிய இனப் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது பற்றியும் அவர் விவரிக்கவில்லை.

சர்வதேச நாணயநிதியத்துடனான ஒப்பந்தம் முன்னோக்கிச் செல்லும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். ஆனால் தேர்தலுக்கு முன்னர் இந்த விடயத்தைக் குறிப்பிடவில்லை. சர்வதேச நாணயநிதியத்துடன் புதிய ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும் என்றே கூறினர். தற்போது ரணிலின் வழியிலேயே செல்கின்றனர். சர்வதேச நாணயநிதியத்தின் கைப்பாவையாக தேசிய மக்கள் சக்தியும் மாறியுள்ளது என்றே கூற வேண்டும். - என்றார். (ச-44)



## பொலிஸாருக்கு 'டிமிக்கி' சந்தேகநபர் சிக்கினார்!

கிளிநொச்சி, நவ. 30

பல்வேறு திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த சந்தேகநபர் ஒருவர் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை கண்ணகிநகர்ப் பகுதியில் உறவினரின் வீட்டு நிகழ்வொன்றுக்கு சென்று விட்டு திரும்பிக்கொண்டிருந்த பெண்ணின் தாலிக்கொடியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அறுத்துச் செல்ல முற்பட்டபோது திருடர்களில் ஒருவரின் கைபேசி பெண்ணிடம் அகப்பட்டது.

சம்பவம் தொடர்பாக தாலிக்கொடியை பறிகொடுத்த பெண் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் அளித்த முறைப்பாட்டுக்கமைய கைபேசியின் விவரங்களுக்கமைய சந்தேகநபரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அவரிடமிருந்து தாலிக்கொடி மற்றும் முன்பு திருடப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டி, தொலைபேசிகள், 6 நீர் பம்பிகள் என்பனவற்றை பொலிஸார் மீட்டனர்.

சந்தேகநபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் அவரை தடுப்புக்காவலில் வைக்குமாறும் மற்றைய சந்தேகநபரை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்று உத்தரவு பிறப்பித்தது.

அதேவேளை தொலைபேசி மற்றும் தொலைக்காட்சி பெட்டி, நீர் பம்பிகள் என்பனவற்றை பறிகொடுத்தவர்கள் தருமபுர பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க அறிவித்துள்ளார். (ச-113)

## இடைத்தங்கல் முகாம்களில் நடமாடும் மருத்துவசேவை

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ். மாவட்டத்தில் உள்ள இடைத்தங்கல் முகாம்களில் நேற்று முதல் நடமாடும் மருத்துவசேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்பாணம் மற்றும் நல்லூர்ப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள இடைத்தங்கல் முகாம்களுக்கு யாழ். போதனா மருத்துவமனையிலிருந்தும் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள இடைத்தங்கல் முகாம்களுக்கு அந்தந்த பிரதேச மருத்துவமனைகளிலிருந்தும் சுகாதாரப் பிரிவினர் மருத்துவசேவைகளை வழங்கவுள்ளனர்.

இதன்போது நோய்நிலைமைகள் அடையாளம் காணப்படுகின்ற நோயாளிகளுக்கு மருந்துகள் மற்றும் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன எனப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்தார். (ச-125)



## வன்முறையை போற்றுவது முன்னோக்கிய பாதையல்ல!

### அலிசப்ரி தெரிவிப்பு

கொழும்பு, நவ. 30

இரக்கமற்ற வகையில் பயங்கரவாதத்தைக் கட்டமைத்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தையோ அல்லது அதன் தலைவரையோ போற்றுவது நாம் முன்னோக்கிப் பயணிப்பதற்கு ஏதுவான வழிமுறையாக அமையாது. வன்முறையைக் கொண்டாடுவதன் மூலம் அதன் காயங்களிலிருந்து மீளமுடியாது என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.


மாவீரர் தினத்தை முன்னிட்டு கடும் மழைக்கு மத்தியிலும் வடக்கு, கிழக்கு மக்கள் மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் சென்று உணர்வெழுச்சியுடன் மாவீரர்களை நினைவுகூர்ந்தனர்.

இந்த நினைவுகூரல் தொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சகல அன்புக்குரியவர்களையும் நினைவுகூருவதற்கு குடும்பங்களுக்கு இடமளிக்கப்படவேண்டும். இதுவோர் மனித உரிமை என்பதுடன், கடந்தகாலக் காயங்களை ஆற்றுவதற்குரிய மிகமுக்கியமான நகர்வாகும்.

இருப்பினும் இரக்கமற்ற வகையில் பயங்கரவாதத்தைக் கட்டமைத்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தையோ அல்லது அதன் தலைவரையோ போற்றுவது நாம் முன்னோக்கிப் பயணிப்பதற்கு ஏதுவான வழிமுறையாக அமையாது. வன்முறையைக் கொண்டாடுவதன் மூலம் அதன் காயங்களிலிருந்து மீளமுடியாது - என்றார். (ச-இ)



## தற்காலிக இலக்கத் தகடு பயன்பாடு இனி இல்லை

கொழும்பு, நவ. 30

தற்காலிக இலக்கத் தகடுகளைப் பயன்படுத்தி வீதிகளில் வாகனங்களை ஓட்டுவதற்கு வழங்கப்பட்டு வந்த அனுமதி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி முதல் இரத்துச் செய்யப்படுகின்றது என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வாகன இலக்கத் தகடுகளை வழங்குவதில் நிலவி வந்த சிக்கல் நிலை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு மீண்டும் இலக்கத் தகடுகளை வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய டிசெம்பர் 15ஆம் திகதிக்குப் பிறகு தற்காலிக இலக்கத் தகடுகளைப் பயன்படுத்தினால் பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

## தேசியப்பட்டியல் யாருக்கு? ஐ.ம.ச.வுக்குள் குத்துவெட்டு

கொழும்பு, நவ. 30

தேசியப்பட்டியல் விவகாரத்தால் ஐக்கிய மக்கள் கூட்டணிக்குள் ஏற்பட்டிருந்த குழப்பநிலை உக்கிரமடைந்துள்ளது எனத் தெரியவருகின்றது.

இதனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தயாசிறி ஜயசேகர அணி மற்றும் டலஸ் அழகப்பெரும தரப்பு என்பன கூட்டணி உறவை முறித்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்திக்கு ஐந்து தேசியப்பட்டியல் ஆசனங்கள் கிடைக்கப்பெற்றன. அதில் ஒன்று கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கு வழங்கப்பட்டது.


அத்துடன், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன ஆகியோருக்கும் தேசியப்பட்டியல் உறுதியாகியுள்ளது.

எஞ்சிய இரண்டு ஆசனங்களை எவருக்கு வழங்குவது என்பதிலேயே தற்போது குழப்பம் நீடிக்கின்றது.

சுஜீவ சேனசிங்க, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், நிஷாம் காரியப்பர், ஹிருணிகா, டலஸ் அழகப்பெரும, ஜி.எல்.பீரிஸ் ஆகியோரின் பெயர்கள் பரிசீலனையில் இருந்தாலும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் இருவருக்கு அதற்கான வாய்ப்பை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது. இதனால் டலஸ், பீரிஸ், தயாசிறி அணிக்கு ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே கூட்டணிக்குள் தற்போது குழப்பம் உச்சம் தொட்டுள்ளது. (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் ட்ரம்புக்கு உயிரச்சுறுத்தல்!



## புடின் பகீர் தகவல்

மொஸ்கோ, நவ. 30
ட்ரம்பின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது. அவர் பாதுகாப்பாக இல்லை என்று ரஷ்ய அதிபர் புடின் எச்சரித்துள்ளார்.
கஜகஸ்தானுக்குச் சென்றுள்ள புடின் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே, ட்ரம்புக்கு எதிராக மிகப்பெரிய சூழ்ச்சித் திட்டங்கள் அமெரிக்காவில் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் பாதுகாப்பாக இல்லை என்பது உறுதி எனவும் கூறியுள்ளார்.
தேர்தல் காலத்தில் ட்ரம்பைக் கொல்ல முயன்றனர். அரசியலுக்கு அப்பாற்பட்டு அவருடைய தனிப்பட்ட வாழ்க்கை உட்பட அனைத்து விடயங்களிலும் அவரைத் தோற்கடிக்க முயன்றனர். ஆனால், எதுவும் ட்ரம்பின் வெற்றியைத் தடுத்து நிறுத்தவில்லை. தற்போதும் ட்ரம்புக்கு எதிரான சூழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் ட்ரம்ப் புத்திசாலி. எனவே அவர் இந்த விடயத்தை வெற்றிகரமாகக் கையாள்வார் என நம்புகின்றேன் என்றும் புடின் தெரிவித்துள்ளார்.
இவ்வளவு காலமும் ரஷ்யாவுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் அச்சத்துடன் இருந்துவிட்டு, ட்ரம்ப் அதிபராகத் தெரிவாகியுள்ள நிலையில் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளை ரஷ்யாவுக்குள் பயன்படுத்த பைடன் ஒப்புதல் வழங்கியுள்ளார். ட்ரம்பை அரசியல் நெருக்கடிக்குள் தள்ளுவதற்காக அவர்கள் இந்த முடிவை மேற்கொண்டுள்ளார். அமெரிக்கா தன் சுய அரசியலுக்காகவே உலக அரசியலைப் பயன்படுத்தும் என்பதற்கு இதுவொரு சான்று என்றும் புடின் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம்
# வழங்குநர்களை பதிவு செய்தல் - 2025

வலிகாமம் மேற்கு பிரதேச சபையானது 2025ஆம் ஆண்டுக்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட பொருட்கள், சேவைகள் / வேலைகள் போன்றவற்றை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், வியாபார நிறுவனங்கள், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- தொகுதி "A" - பொருட்கள் வழங்குதல் (பொது)
- தொகுதி "B" - சேவைகள் / வேலைகள்
- தொகுதி "C" - வாகனத்திருத்தமும் சுத்திகரிப்புச் சேவையும்
- தொகுதி "D" - ஒப்பந்த வேலைகள்
- தொகுதி "E" - உணவு வகைகள்.

| தொகுதி A | பொருட்கள் வழங்குதல் (பொது) |
|---|---|
| A-01 | காகிதாதிகள், எழுதுபொருட்கள், உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A-02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம் / இரும்பு / உருக்கு) |
| A-03 | கணினிகள், கணினியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள் நிழற் பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள், ரிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A-04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடை மற்றும் துணிவகைகள் |
| A-05 | குளியலறை பொருத்திகள், மாபிள்கள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A-06 | கட்டட இரும்புப் பொருட்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் கட்டுமானப் பொருட்கள் |
| A-07 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள், மின் மோட்டர்கள், மின்சார பல்ப்புகள், மின் விசிறிகள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A-08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனைய பொருட்கள் |
| A-09 | சுத்திகரிப்பு பொருட்கள், கிருமி நாசினிகள் மற்றும் ஏனையவை. |
| A-10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப் பொருட்கள், ரயர், ரியூப் மற்றும் ஏனையவை |
| A-11 | தோல் உற்பத்திப் பொருட்கள் |
| A-12 | எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் |
| A-13 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A-14 | கற்கள், மண் வகைகள், கூட்டெரு பசளை, தார் |
| A-15 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள் |
| A-16 | அலங்காரப் பொருட்கள் |
| A-17 | பனை மரங்கள், சலாகைகள், கம்பஸ் மரம், ஏனைய பலகைகள். |
| A-18 | இரும்புப் பொருட்கள், வேலைத்தல உபகரணங்கள். |
| A-19 | பாதணிகள், தோல்பொருட்கள், மழைக்கவசம், கையுறை. |
| A-20 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப்பொருட்கள் |
| A-21 | அலுமினிய பிற்றிங்குடன் தொடர்புடைய பொருட்கள் |
| A-22 | மரக்கன்றுகள், மரம் நாற்றுக்கள் மற்றும் தொடர்புடைய பொருட்கள் |
| A-23 | மருந்துப் பொருட்கள் |
| தொகுதி - B | சேவைகள் / வேலைகள் |
| B-01 | மரத்தளபாடங்கள், உருக்கு தளபாடங்கள் திருத்தம் |
| B-02 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும், தொழில் நுட்ப ஆலோசனை வழங்கலும், திருத்தம் செய்தலும். |
| B-03 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதல், மின்விசிறிகள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் நிழல் பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம், கணினி விரல் அடையாளத்தை பதிவு செய்யும் இயந்திரம் திருத்தம், சேவிஸ் செய்தல். |
| B-04 | மின்பிறப்பாக்கி, இலத்திரனியல் சாதனங்கள், துணை பொருட்கள் திருத்தம் |
| B-05 | இறப்பர் முத்திரை வகைகளை தயாரித்து வழங்கல் |
| B-06 | கோலவுடை தைத்தல், கோலவுடை வழங்குதல் |
| B-07 | சுத்திகரிப்பு சேவையும் பாதுகாப்பு சேவையும் |
| B-08 | கணினி பிறின்டர் அதனுடன் இணைந்த பொருட்கள் திருத்தமும் பராமரிப்பு செய்தலும் |
| B-09 | பதிப்பக வேலை - சகலவித படிவங்களும் அச்சிடலும் புத்தகங்கள் கட்டுதலும் |
| B-10 | பனர், ஸ்ரிக்கர், லமினேற்றிங், போட்டோபிறேம் மற்றும் தொடர்பான சேவைகள். |
| B-11 | கட்டிட அமைப்பும் திருத்த வேலைகளும் |
| B-12 | இரும்பு, கம்பிநெத் தொடர்பான பிற்றிங் வகைகள். |
| B-13 | ஏற்றியிறக்கல் சேவை (தார் முதலான வீதி திருத்தத்திற்கான மூலப்பொருட்கள், கட்டட மூலப் பொருட்கள்) |
| B-14 | கனரக வாகனங்கள் / இயந்திரங்கள் திருத்துதல் |

| தொகுதி C | வாகனத் திருத்தமும் சுத்திகரிப்புச் சேவையும் |
|---|---|
| C-01 | சகல விதமான வாகன திருத்தமும், வாகன சுத்திகரிப்பு /உராய்வு நீக்கிகள், எஞ்சின் ஒயில், சீற் குசன் வேலை. |
| C-02 | வாகனங்களுக்குரிய ரியூப் ஒட்டுதல் உலோக வேலைகள் |
| C-03 | உழவு இயந்திரம், உழவு இயந்திரப் பெட்டி திருத்தம், ஏனைய வாகனங்களுக்கான திருத்தம். |
| C-04 | நீர் இறைக்கும் இயந்திரம், நீர் இறைக்கும் மோட்டார் திருத்தம் |
| C-05 | மோட்டார் சைக்கிள் திருத்தம், சுத்திரிகரிப்பு |
| தொகுதி D | ஒப்பந்த வேலைகள் (CIDA பதிவு உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்) |
| D-01 | கட்டட நிர்மானமும் திருத்தமும் |
| D-02 | வீதி நிர்மானமும் திருத்தமும் |
| D-03 | கிணறு /குழாய்க்கிணறு அமைத்தல் |
| D-04 | வர்ணம் பூசுதல். |
| தொகுதி E | உணவு வகைகள் |
| E-01 | சமைத்த உணவு, சிற்றுண்டி வகைகள் |
| E-02 | குளிர்பான வகைகள், குடிநீர்ப்போத்தல்கள் |
| E-03 | உலர் உணவுப்பொருட்கள். |

**நியந்தனைகள்**

1. வழங்கல்கள் / சேவைகள் 2025 ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்
2. ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. விண்ணப்பப் படிவங்களை ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணம் ரூபா 1,000.00 இனை செலுத்தி தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
4. பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் இதற்குப் புறம்பான வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்களைக் கோருதல் மற்றும் கொள்வனவு செய்யும் உரிமையும் வேறு பெறுகைச் செயற்பாடுகளைக் கையாளும் உரிமையும் பிரதேச சபைக்கு உண்டு.
5. மனுக்கள் கோரும் போது சரியான விலை மனுக்கள் சமர்ப்பிக்காத அல்லது கோரப்பட்ட பொருள்களை உரிய காலத்தினுள்ளும் மாதிரிக்கு அமைவாகவும் வழங்காத பதிவு செய்த வழங்குநர்களின் பெயர்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி பதிவிலிருந்து நீக்கப்படும்.
6. வியாபார பதிவுச் சான்றிதழில் குறிப்பிட்ட பொருள்கள் சேவைகளுக்கு மட்டுமே வழங்குநர்கள் பதிவு செய்யப்படுவார்கள்.
7. பழுது பார்த்தலுக்கோ, வாகன பராமரிப்புக்கோ பதிவு செய்யப்படவுள்ள கராஜ்கள், சேவிஸ் நிலையங்கள் என்பன தேவையான அடிப்படை வசதிகளைக் கொண்டிருத்தல் அவசியம். தேவையேற்படும் போது இயந்திரப் பொறியியலாளர் மூலம் தரத்தினை பரிசிலனை செய்வதற்கான முழு அதிகாரம் சபைக்கு உண்டு.
8. எமது பிரதேச சபையில் வழங்குநர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் ஒப்பந்த வேலைகளை மேற்கொள்ளும் ஒப்பந்தகாரர்கள் தத்தமது பிரதேச சபையில் 2024 ஆம் ஆண்டுக்கான வியாபார உரிமத்தை பெற்றுக் கொண்டமைக்கான சான்றிதழின் பிரதியினை விண்ணப்பத்துடன் இணைத்துச் சமர்ப்பித்தல் அவசியமாகும்.
9. விண்ணப்பப் படிவங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்களை பதிவு செய்தல் - 2025" எனக் குறிப்பிட்டு செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் என்னும் முகவரிக்கு 16.12.2024 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
10. திருப்திகரமற்ற வழங்கல்கள் / சேவைகளை நிராகரிக்கும் உரிமை செயலாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை 021 225 0144 எனும் தொலைபேசி இலக்கத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

30.11.2024

செயலாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாகத்தெரிவு

யாழ்ப்பாணம், நவ. 30

வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரி வும் கண்டிவீதி, யாழ்ப்பாணம் கலைத்தூது மண்டபத்தில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி நடைபெறும்.

இயங்குநிலை அங்கத்தவர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ச-25, 9)


### வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.
### சந்தைகள், கோழியிறைச்சி மற்றும் கருவாட்டுக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2025

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், கோழியிறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள் என்பவற்றிற்கு 2025.01.01 ஆம் திகதி தொடக்கம் 2025.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2024.12.02 - 2024.12.10 நண்பகல் 12.00 மணி வரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 2024.12.10 பி..ப 2.30 மணி வரை

கேள்விதிறக்கும் திகதி :- 2024.12.10 பி.ப 2.30 மணி

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரியநேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது 2024.11.30 ஆம் திகதிய உதயன், தினக்குரல் பத்திரிகைகளில் எமது கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் பார்வையிடலாம்.

சந்தைகள், கோழியிறைச்சி , மாட்டிறைச்சி மற்றும் கருவாட்டுக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான குத்தகை அட்டவணை - 2025

| இல | சந்தைகள், இறைச்சிக்கடைகள் கருவாட்டுக் கடைகள் | மாதாந்த வாடகை சபைக்குச் செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| சங்கானை உப அலுவலகம் | | | | | |
| 01 | சங்கானை மாட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 1,994,525.00 | 20,000.00 | 1,000.00 |
| 02 | சங்கானை மரக்கறிச்சந்தை பொதுமலசலகூடம்-01 | - | 23,750.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | சங்கானை மரக்கறிச்சந்தை பொதுமலசலகூடம்-02 | - | 23,750.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | சங்கானை பஸ்தரிப்பிட பொதுமலசலகூடம் | - | 23,750.00 | 1,000.00 | 1,000.00 |
| சுழிபுரம் உப அலுவலகம் | | | | | |
| 01 | பொன்னாலை வாராந்தச் சந்தை | - | 45,175.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | தொல்புரம் மத்திய சந்தை | — | 26,460.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | பல்லசுட்டி சந்தை | — | 29,400.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | மூளாய் மீன் சந்தை | — | 114,950.00 | 1,200.00 | 1,000.00 |
| வட்டுக்கோட்டை உப அலுவலகம் | | | | | |
| 01 | சங்கரத்தைச்சந்தை | - | 533,800.00 | 5,500.00 | 1,000.00 |

ச.பாலரூபன்,
தலைவர்,
உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

தலைமை அலுவலகம்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.
2024.11.30

### வலிகாமம் மேற்கு பிரதேசசபை - சுழிபுரம்
### கடை வாடகைக்கு வழங்குதல் - 2025

வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கடையினை உள்ளூராட்சி ஆணையாளரின் 1980/46 ஆம் இலக்க 1980.12.11 ஆம் திகதிய சுற்றுநிரூபத்திற்கு அமையவும் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த வாடகைக்கு அமைவாகவும் வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக் குறைந்த ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் கோரப்படுகின்றது.

| தொடர் இல. | கடை விபரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | மீளளிக்க முடியாத கேள்விப்படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | சுழிபுரம் நவீன சந்தைக் கடை இல. - 05 | 405,000.00 | 8,100.00 | 1000.00 |

கடைகளை வாடகைக்கு வழங்குதல் தொடர்பான கேள்வி நடைமுறைக்கு மேற்குறித்த திகதிகள் பொருத்தமானது. மேலதிக நிபந்தனைகளை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

ச.பாலரூபன்,
செயலாளர்,
உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,
வலிகாமம் மேற்கு பிரதேசசபை,
சுழிபுரம்.
2024.11.30

(CR/43801) J-1


# மன்னார் மாவட்டத்தில் 67,928 பேர் பாதிப்பு

சீரற்ற வானிலையால் மன்னார் மூன்றில் இரண்டு பங்கு நீரினால் மூழ்கியுள்ளது. இதனால் இந்த மாவட்டத்தில் 19 ஆயிரத்து 723 குடும்பங்களைச் சேர்ந்த 67 ஆயிரத்து 928 பேர் பாதிப்படைந்துள்ளனர் என மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் 3 ஆயிரத்து 210 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 263 பேர் 69 முகாம்களில் தங்க வைக்கப் பட்டுள்ளனர். இவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப் பட்டு வருகின்றது.

இம்முறை மேற்கொள்ளப் பட்ட காலபோக விவசாயத்தில் 7 ஆயிரத்து 988 ஹெக்ரேயர் நெற்செய்கை நீரினால் மூழ்கடிக்கப்பட்டு பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

இதனை மதிப்பீடு செய்யும் பணியும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. வெள்ளத்தினால் ஏற்படுத்தப்பட்ட சேதங்கள் தொடர்பில் மதிப்பீடு செய்த பின்பு அதன் அறிக்கைகளை அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு அனுப்பப்பட்டு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-25, 60)



# வெள்ள நிலைமைகளை பார்வையிட்ட மஸ்தான்

வவுனியா, நவ. 30

வவுனியா, பட்டாணிச்சூர் கிராமத்தில் வெள்ள நிலைமைகளை வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் நேற்று முன்தினம் பார்வையிட்டார்.

இதன்போது, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவுகளையும் வழங்கி வைத்தார். (ச-18)



# நிவாரண உதவிகள்

யாழ்ப்பாணம், நவ.30

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கோண்டாவில் தென் கிழக்கு, கோண்டாவில் தென்மேற்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஐம்பது பேருக்கு வடக்கு மாகாண விவசாய அமைச்சின் நலன்புரிச் சங்க நிர்வாகத்தால் நாற்பதாயிரம் ரூபா பெறுமதியான நிவாரண உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (ச-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### 7,000...

லேயே தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 21 ஆயிரத்து 619 குடும்பங்களைச் சேர்ந்த 72 ஆயிரத்து 321 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 2 ஆயிரத்து 49 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 29 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஐந்து வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன் 189 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-ம-66)

### யாழ்...

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான சமைத்த உணவுத் தேவை மற்றும் உலருணவுத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக 11 மில்லியன் ரூபாவும், பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் அவசரத் திருத்தப் பணிகளுக்காக ஒரு மில்லியன் ரூபாவும் விடுவிக்கப்பட்டுள்ளது.

(அ-ச-66)

### வடக்கில்...

பட்டுள்ளது. பெங்கால் புயல் தீவிரப் புயலாக மாற்றம் பெற்றதன் தாக்கத்தால், இந்தக் குளிர்நிலை நிலவியதாக காலநிலை ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். அத்துடன், புயல் காரணமாக வளிமண்டலத்தில் மாசு ஏற்பட்டுள்ளதாகவும், அதுவும் குளிருக்குக் காரணம் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(அ-ம-இ)


## மரண அறிவித்தல்

தோற்றம்
08 . 12 . 1932



மறைவு
28 . 11 . 2024

### கந்தையா கமலநாதன்

யாழ். அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வதிவிடமாகவும், லண்டனை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கமலநாதன் நேற்றுமுன்தினம் (28.11.2024) வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

மல்லாகத்திலுள்ள அவரது இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.**

**தகவல்:**
**மகள் - ஜெயகௌரி**
**மகன் - ஜெயசங்கர்**
**மருமகள் - சாரதா**

(cs 56782(N.1)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
18 . 11 . 1949



மறைவு
03 . 11 . 2024

### அமரர் கணபதிப்பிள்ளை சிவபாலசிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (01.12.2024) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு எதிர்வரும் (03.12.2024) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்).**

மேலும் அன்னாரின் மரணச்செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும், பதாகைகள், மலர்வளையங்கள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பூதராயர் வீதி,**
**பருத்தித்துறை.** (CS/56777) J-1 **குடும்பத்தினர்**

## உலகினைக் கடந்த உத்தமர்களே!

இரவி ஒன்று
அஸ்தமனமாகிய
இருபத்திநான்கு ஆண்டுகளில்

விடிவெள்ளி ஒன்று
விடியாத வானுக்கு ஆகுதியாகி
இருபத்தெட்டுஆண்டுகளில்





உதயம் 03.08.1942 அஸ்தமனம் 30.11.2000

**அமரர்**
**இராசு செல்வரட்ணம்**
**(சித்தப்பா)**

(ஸ்தாபகர், அம்பாள் மரக்காலை,
வீரமாகாளி அம்மன் கோயிலடி, நல்லூர்.

மண்மகிழ 19.10.1976 கண் நெகிழ 21.08.1996

**அமரர்**
**செல்வி றஜனி**
**செல்வரட்ணம்**

(A/L 1995, வர்த்தகப்பிரிவு மாணவி
யாழ் இந்து மகளிர் கல்லூரி)


அன்பான உறவுகளே!
உங்களை நினைத்து வாழ்ந்த மனது
உங்களை மறந்து வாழ மறுக்கிறது !!
உறவுகள் தொலைந்து போனாலும்
நினைவுகள் தொலைந்து போவதில்லை அல்லவா ?
தொலைக்க முடியாத பொக்கிஷமாய் !
செதுக்கமுடியாத கவிதையாய் !
உங்கள் நினைவுகள் எம்முடன்
பயணிக்கின்றன !

"செல்வபதி"
**256, நாவலர் வீதி,**
**இலுப்பையடிச்சந்தி, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம்
26 . 05 . 1949



மறைவு
29 . 11 . 2024

### ஆறுமுகம் குலேந்திரநாயகம்

**(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)**

நீர்வேலி தெற்கு கந்தசுவாமி கோவிலடியைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி தெற்கு நெல்லியோடை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் குலேந்திரநாயகம் அவர்கள் நேற்று (29.11.2024) வெள்ளிக்கிழமை காலை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நாகம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான வேலும்மயிலும் - தில்லைநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், உருத்திராணி அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான இராசநாயகம், செல்வராணி, சபாநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தனுசா (திருகோணமலை), பானுசா (OIC in SCS - வவுனியா), வேணுசா, தேனுசா (கனடா), ரேணுகா ஆகியோரின் அன்புத் தந்தையும், சதீஷ், திலீபன், யனூசன் (கனடா), அஜந்ததாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிஜித், திரெளசிக், தனீக்ஷா, ஆத்விக் ஆகியோரின் அன்புப் பேரனும், உருத்திரன், யோகன், சந்திரன், விமலராணி, வசந்தி, வசந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.12.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கருதடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**நெல்லியோடை,**
**அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.** (CS/56784) J-1

**தகவல் : குடும்பத்தினர்**
**077 182 7685**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலப்போ மீண்டும் போராளிகளிடம்!

சிரியாவின் இரண்டாவது பெரிய நகரமான அலப்போ, நான்கு வருடங்களின் பின்னர் மீண்டும் அல் ஷாம் போராளிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் ஆதிக்கம் செலுத்திய காலத்தில், அலப்போ நகரத்தின் ஒரு பகுதி ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பிடமும், மிகுதிப் பகுதிகள் போராளிக் குழுக்களாலும் கட்டுப்படுத்தப்பட்டன. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் பக்தாதி கொல்லப்பட்டு அந்த அமைப்பு தோற்கடிக்கப்பட்ட பின்னர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு அலப்போவில் இருந்து துடைத்தெறியப்பட்டது. அத்துடன், போராளிக் குழுக்களும் பலவீனப்படுத்தப்பட்டனர்.

இதையடுத்து, சிரியப் பாலைவனங்களில் செயற்பட்டுவந்த அல் ஷாம் போராளிகள் மீண்டும் தம்மைப் பலப்படுத்திக் கொண்டு, அலப்போ நகரைத் தற்போது கைப்பற்றியுள்ளனர். அலப்போவில் போராளிகளுக்கு பெரும் ஆதரவு உள்ளதால், அவர்கள் நகருக்குள் நுழையும் போது மக்கள் ஆர்ப்பரித்து வரவேற்கும் வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ளன.

தற்போதைய நிலவரத்தின் அடிப்படையில், இட்லிப் மற்றும் அலப்போ நகரங்கள் போராளிகளால் முற்றுமுழுவதுமாகக் கட்டுப்படுத்தப்படுகின்றன. சிரியாவின் பழைமைகளை உள்ளடக்கிய நகரமான பல்மைரா அல் ஷாம் போராளிகளின் பிரதான இலக்குகளில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை
## மீள் கேள்வி அறிவித்தல் - 2025

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு சொந்தமான கடைகளை ஒரே கொடுப்பனவு (Key Money) அடிப்படையில் வழங்குவதற்காக மீள் கேள்வி கோரப்படுகின்றது.

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| இல | கடை விபரம் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | பம்பைமடு கடைத் தொகுதி - கடை 01 | 7,000.00 | 2,000.00 | 10,000.00 | 2,520,000.00 |
| 2 | பம்பைமடு கடைத் தொகுதி - கடை 02 | 7,000.00 | 2,000.00 | 10,000.00 | 2,520,000.00 |
| 3 | பம்பைமடு கடைத் தொகுதி - கடை 03 | 7,000.00 | 2,000.00 | 10,000.00 | 2,520,000.00 |
| 4 | பம்பைமடு கடைத் தொகுதி - கடை 04 | 7,000.00 | 2,000.00 | 10,000.00 | 2,520,000.00 |
| 5 | பம்பைமடு கடைத் தொகுதி - கடை 05 | 7,000.00 | 2,000.00 | 10,000.00 | 2,520,000.00 |
| 6 | பம்பைமடு கடைத் தொகுதி - கடை 06 | 7,000.00 | 2,000.00 | 10,000.00 | 2,520,000.00 |
| 7 | ஓமந்தை பின் வரிசை கடைத் தொகுதி (A9 வீதி அருகே) - கடை 01 | 3,500.00 | 2,000.00 | 10,000.00 | 1,260,000.00 |
| 8 | ஓமந்தை பின் வரிசை கடைத் தொகுதி (A9 வீதி அருகே) - கடை 02 | 3,500.00 | 2,000.00 | 10,000.00 | 1,260,000.00 |
| 9 | ஓமந்தை பின் வரிசை கடைத் தொகுதி (A9 வீதி அருகே) - கடை 03 | 3,500.00 | 2,000.00 | 10,000.00 | 1,260,000.00 |
| 10 | ஓமந்தை பின் வரிசை கடைத் தொகுதி (A9 வீதி அருகே) - கடை 04 | 3,500.00 | 2,000.00 | 10,000.00 | 1,260,000.00 |

* கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் :- 2024.11.30 - 2024.12.13 பிற்பகல் 12.00 வரை
* கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல் :- 2024.12.13 பிற்பகல் 02.00 மணிவரை
* கேள்விப் பத்திரம் திறக்கப்படும் நேரம் :- 2024.12.13 பிற்பகல் 02.15 மணி

**கேள்வி நிபந்தனைகள்**

1. கேள்விதாரர் இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும் என்பதுடன் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
2. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதம், தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் நிழற் படப் பிரதி, கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட வதிவிட சான்றிதழ் என்பவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கேள்விப் படிவங்களில் ஒரு பிரதி "செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா" என்ற முகவரிக்கும், ஒரு பிரதி பி / உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பி / உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்கா வீதி, வவுனியா" என்ற முகவரிக்கும் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் கேள்விப் பெட்டியினுள் இடமுடியும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எதற்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னரோ நேரத்திற்குப் பின்னரோ கிடைக்கும் கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராகக்" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் தவறுனராக அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
5. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தங்களது கேள்வித் தொகையினை எம்மால் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னர் ஒரே தடவையில் செலுத்தி ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
6. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்வி சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
7. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்பு பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
8. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது எழுத்து மூல சம்மதம் பெற்ற பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
9. கடைகளை பெற்றுக் கொள்வோர் பொது சுகாதார நடைமுறைகளினை பின்பற்றுவதுடன் கடை மற்றும் அதன் சுற்றாடலில் உள்ள கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்துவதற்கு முழுப் பொறுப்பாளியாவீர்கள்.
10. குறித்த கடைகளில் வாகன திருத்தகம், இரும்பு ஒட்டு தொழிலகம், வெடி மருந்து உற்பத்திகள் விற்பனை, மீன், இறைச்சி கடை, அரைக்கும் ஆலை, மதுபானசாலை போன்ற கடைகள் நடாத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. மற்றும் ஓமந்தை கடைத் தொகுதிக்கு விண்ணப்பிப்பவர்கள் மேற்குறித்த கடைகளுடன் மரக்கறி கடைகள், உணவகங்கள் நடாத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரில் அல்லது 024-2050067 மற்றும் 024-2225737 எனும் தொலைபேசி மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**செயலாளர்,**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.**

(cr.43795) (N-1)

## வலிதெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.
## படவரைஞராகப் பதிவு செய்தல் / புதுப்பித்தல் - 2025

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 47 தொடக்கம் 59 வரையானதுடன், மற்றும் 1978 ஆண்டின் 41ம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் புதிய திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி ஆணை / ஒழுங்கு விதி நடைமுறைகளுக்கமைவாகவும் வலி தெற்கு பிரதேச சபையில் 2025ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவுசெய்வதற்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

எனவே எமது சபையில் பதிவு செய்துள்வர்களும் புதிதாக பதிவு செய்பவர்களும் 2025ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும் / புதுப்பித்துக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கு கல்வித் தகைமை Drafting Technology Civil - NVQ Level - 5 இருத்தல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

**குறிப்பு :-**

படவரைஞராக பதிவு மற்றும் புதுப்பித்தல் படிவ கட்டணம் - ரூபா 1,000.00
படவரைஞராக பதிவு புதுப்பித்தல் கட்டணம் - ரூபா 3,000.00
படவரைஞராக புதிதாக பதிவு செய்வதற்கான கட்டணம் - ரூபா 5,000.00

**சாரதா உருத்திரசம்பவன்**
**செயலாளர்**
**வலிதெற்கு பிரதேசசபை , சுன்னாகம்.**

(CR/43799) J-1

## சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்(வ-து)
## கூறுவிலை கோரல்

எமது சங்கத்தினால் நிர்வகிக்கப்பட்டுவரும் கண்டிவீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தின் பிரதான டீசல் பம்பிற்கு கனப்பிவேலை செய்வதற்காக கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர் மேலதிக விபரங்களையும் விண்ணப்ப படிவத்தினையும் சங்க தலைமைக்காரியாலயத்தில் பெற்று **"பொதுமுகாமையாளர், சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், கண்டிவீதி, சாவகச்சேரி"** என்ற முகவரிக்கு எதிர்வரும் 15.12.2024 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவும்.

**குறிப்பு:-** மீளளிக்கமுடியாத வைப்புப்பணம் ரூபா 1000/= ம், மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் ரூபா 45000/= ம் செலுத்தப்படல் வேண்டும்.

**கண்டி வீதி,**
**சாவகச்சேரி.**
30.11.2024

**பொதுமுகாமையாளர்**
**T.P.No- 021 227 0830**

(cr.43798) (N-1)

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
14 . 04 . 1965



**மறைவு**
28 . 11 . 2024

# இராசதுரை மனோகரன்

புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை மனோகரன் நேற்றுமுன்தினம் (28.11.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.12.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் புத்தூர் கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் கிழக்கு அந்திரானை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புத்தூர் கிழக்கு,**
**புத்தூர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(cs 56786 (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 ஈரானியர்களுக்கு ஆயுள் தண்டனை

கொழும்பு, நவ.30

போதைவஸ்து கடத்திய குற்றச்சாட் டின் கீழ் 7 ஈரானி யர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சபுதிவ கடந்த வியா ழக்கிழமை இந்த தீர்ப்பை வழங்கியுள்ளார்.

2019ஆம் ஆண்டு ஜுலை மாதம் இவர்கள் மட்டக்குளி கடலில் வைத்து 425 கிலோ ஹெரோய்னுடன் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப் பட்டதையடுத்து ஆயுள் தண்டனை தீர்ப்பு வழங்கப்பட் டுள்ளது. (ரி-6)



கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டு இடைத்தங்கல் முகாம்களிலுள்ள மக்களை கடற்றொழில் அமைச்சர் இரா மலிங்கம் சந்திரசேகர் பார்வையிட்டு, அவர்களின் குறைகளையும் கேட்டறிந்து உதவிப்பொருள்களையும் வழங்கி வைத்தார். (ச-113)


## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

### பிரதேசசபை கடைகள் வாடகைக்கு வழங்குதல் தொடர்பான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலகத்திற்குட்பட்ட சுன்னாகம் சந்தைப்பகுதியில் உள்ளூர் அபிவிருத்தி உதவித்திட்ட நிதியில் (LDSP) அமைக்கப்பட்ட கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்படும் கடைகளினை 06.01.2025ம் திகதி முதல் வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக்கூடிய ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 02.12.2024 - 17.12.2024 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 18.12.2024 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 18.12.2024 புதன்கிழமை பி.ப 2.30 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம்

| விபரம் | பரப்பளவு (சதுரஅடி) | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ஒருங்கிணைந்த கட்டுப்பணம்) | மாத வாடகை | கேள்விப் பத்திர கட்டணம் | கேள்வி வைப்பு மீளளிக்கக் கூடியது |
|---|---|---|---|---|---|
| **Ground Floor** | | | | | |
| கடை இல - 01 | 197.64 | 1,800,000.00 | 7,500.00 | 2,000.00 | 36,000.00 |
| **Upper Floor** | | | | | |
| கடை இல - 01 | 256.2 | 1,128,000.00 | 4,700.00 | 2,000.00 | 23,000.00 |
| கடை இல - 02 | 256.2 | 1,128,000.00 | 4,700.00 | 2,000.00 | 23,000.00 |
| கடை இல - 03 | 332 | 1,320,000.00 | 5,500.00 | 2,000.00 | 27,000.00 |
| கடை இல - 04 | 332 | 1,320,000.00 | 5,500.00 | 2,000.00 | 27,000.00 |
| கடை இல - 05 | 456.90 | 1,680,000.00 | 7,000.00 | 2,000.00 | 33,600.00 |
| கடை இல - 06 | 456.90 | 1,680,000.00 | 7,000.00 | 2,000.00 | 33,600.00 |
| கடை இல - 07 | 181.17 | 780,000.00 | 3,250.00 | 2,000.00 | 15,600.00 |
| கடை இல - 08 | 181.17 | 780,000.00 | 3,250.00 | 2,000.00 | 15,600.00 |

நிபந்தனைகள்:-

1. விண்ணப்பதாரி வலிகாமம் தெற்கு பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கிராம சேவகரால் உறுதிப்படுத்திய கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்க வேண்டும்.
3. கேள்விப்படிவங்களைப் பெற்றுக்கொள்வோர் மூலப்பிரதி, இணைப்பிரதி ஆகிய இரண்டினையும் பூரணப்படுத்தி தமது கேள்விகளை தனித்தனி கடித உறையில் இட்டு "செயலாளர் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக குறிப்பிட்டு மூலப்பிரதி, இணைப்பிரதி எனக் குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும்.
4. மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும். குறித்த மாத வாடகை பணத்தினை ஒவ்வொரு மாதம் 31ம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதக்கட்டணத்தின் 10 வீதம் தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.
5. கேள்விச்சித்திகாரராக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் 03.01.2025ம் திகதிக்கு முன்னர் ஒருங்கிணைந்த கட்டுப்பணம் முழுத் தொகையையும் ஒரேதடவையில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரு வாரத் திற்குள் பிரதேசசபையிடம் உரிய வியாபாரத்திற்கான வியாபார உரிமத்தினை பெற்று வியாபாரம்/ தொழில் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.
6. சித்தி பெறும் கேள்விதாரர் சந்தையில் விற்பனை செய்யப்படும் பொருட்களையோ அல்லது பிரதேசசபையால் அங்+கரிக்கப்படாத பொருள்களை விற்பனை செய்வதோ, மதுபானவகைகளோ, போதை வஸ்துக்களோ அல்லது தடைசெய்யப்பட்ட வேறு எந்த பொருள்களையோ விற்பனை செய்வது தடை செய்யப்படுவதுடன், கடைக்கட்டடம் வேறு எந்த சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் பாவித்தல் கூடாது.
7. சித்திகர குத்தகைகாரர் வலிகாமம் தெற்கு பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதி முறைக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
8. சித்திகர குத்தகைகாரர் பாதுகாப்பு வைப்பு பணமாக 03 மாத வாடகை தொகையினை முற்பணமாக செலுத்த வேண்டும்.
9. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிம சான்றிதழையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
10. கேள்விப்பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி ச.உருத்திரசம்பவன்
செயலாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(CR/43796) J-1 30.11.2024


# அர்ச்சுனா எம்.பி.யின் பிடியாணை இரத்து

கொழும்பு, நவ. 30

நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனா நீதிமன்றில் சரணடைந்ததையடுத்து அவருக்கு எதி ராக பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை கொழும்பு நீதிவான் நீதிமன்றம் மீளப் பெற்றுள்ளது.


2021 ஆம் ஆண்டு நவம்பர் 26 அன்று, நிகழ்ந்த வீதி விபத்து தொடர் பாக முன்னிலையாகத் தவறியதற்காக மருத்துவர் அர்ச்சுனாவை கைதுசெய்ய நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. இந்த நிலையில் அர்ச்சுனாவின் சார் பில் ஆஜரான சட்டத்தரணி, தனது கட் சிக்காரர் நாடாளுமன்ற அமர்வில் கலந் துகொண்டிருந்த நிலையில் நீதிமன்றத் திகதியை மறந்துவிட்டதாக நீதிமன்றில் தெரிவித்த நிலையில் அவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட பிடியாணை மீளப் பெறப்பட்டுள்ளது. (ச-இ)

# மருதங்கேணிப் பாலம் ஊடான கனரகப் போக்குவரத்துத் தடை

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடர் காரணமாக மருதங்கேணிப் பாலத்தின் இரு புறங்களும் பாதிப்புக்குள் ளாகியமையால் பாலத்தின் ஊடாக கன ரக வாகனப் போக்குவரத்து தற்காலிகமா கத் தடை செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

பாலம் மேலும் சேதமடையாத வகையில் பாலத்தின் இருபுறங்களும் தற்போது மண்மூடைகள் அணைக்கப்பட்டுள்ளன. விரைவில் பாலம் புனரமைக்கப்பட்ட பின் னர் கனரக வாகனப் போக்குவரத்துக்கு அனுமதி வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-20-26-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாதத்...

அளவோடை வீதி, இணுவில் மேற்கு, சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த மனோகரன் கஜந்தரூபன் என்ற இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவர் இரண்டு குழந்தைகளின் தந்தை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு மற்றும் விசாரணைப் பிரிவின் யாழ்ப்பாணம் மாவட்ட உப பொலிஸ் பரிசோதகர் தலைமையிலான குழுவினராலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இன்று அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நீக்கப்படும் என்றும், புதிய நாடாளுமன்றம் அது தொடர்பில் தீர்மானிக்கும் எனவும் ஜனாதிபதி அநுர உள்ளிட்ட பல தரப்பினரும் தொடர்ச்சியாகக் கூறிவந்தனர். எனினும், என்ன காரணத்துக்காக கடந்த அரசாங்கங்களால் தமிழர்களுக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச்சட்டம் பயன்படுத்தப்பட்டதோ அதேநிலைமை தற்போதைய அரசாங்கத்திலும் தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## தமிழ்த்...

தூதுவர் தெரிவித்திருந்தார். தூதுவரின் இந்தக் கருத்துக்களையே நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கண்டித்துள்ளார்.

இது தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் தெரிவித்ததாவது:-

"ஒரு நாட்டின் தூதுவர் பிறிதொரு நாட்டின் தேர்தல் தொடர்பில் ஒருதலைப் பட்சமான கருத்துகளை வெளிப்படுத்தக்கூடாது. உண்மையில் சீனத் தூதுவரின் இந்தக் கருத்துகள் நல்ல விடயமல்ல. அவ்வாறு கருத்துகளை வெளிப்படுத்துகின்றபோது நுனிப்புல் மேயாமல், ஆழ்ந்து சிந்தித்து - ஆராய்ந்துதான் தனது கருத்துகளை வெளிப்படுத்தவேண்டும்.

தமிழ்மக்கள் தமிழ்த்தேசியத்தை விட்டு விலகியதாகவோ, தமிழ்த்தேசியத்தை நிராகரிக்கின்ற தேசிய மக்கள் சக்திக்குப் பெருமளவு வாக்குகளை அளித்துள்ளதாகவோ கூறப்படும் கருத்துகளை நாங்கள் திட்டவட்டமாக நிராகரிக்கின்றோம். இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்திக்குக் கிடைத்த மூன்று ஆசனங்களையும் பார்த்தோமானால், கடந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் டக்ளஸ் தேவானந்தாவுக்கும், அங்கஜன் இராமநாதனுக்கும் கிடைத்த ஆசனங்களாகவே அவை காணப்படுகின்றன. மூன்றாவது ஆசனம், தமிழ்த் தேசியக் கட்சிகள் என்று சொல்லிக்கொள்ளும் தரப்புகள் தமக்குள் பிளவுண்டு மோதுண்டமையால் மக்களிடத்தில் ஏற்பட்ட அதிருப்தியின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளது. எனவே, தமிழ்த் தேசியத்தை விட்டு எங்கள் மக்கள் செல்லவில்லை. இன்னும் சொல்லப்போனால், மக்கள் தமது தவறை தற்போது உணர்ந்துள்ளனர். எனவே உண்மையை விளங்கிக் கொள்ளாமல் போதிய புரிதல் இல்லாமல் சீனத் தூதுவர் கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார். அவருடைய இந்தக் கருத்துகளை, தமிழ்த் தேசியத்தை நலினப்படுத்தும் செயற்பாடாகவே பார்க்க வேண்டியுள்ளது" - என்றார். (அ-ம-26-20)

## புலிகளை...

அஞ்சலிப்பதற்கு இடம் வழங்கக்கூடாது என்று நவீன் திஸாநாயக்க கூறியுள்ளார்.

மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு நாம் முழுமையான எதிர்ப்பைப் பதிவு செய்கின்றோம். விடுதலைப் புலிகள் அமைப்பென்பது சட்டவிரோத அமைப்பாகும். அந்த அமைப்பை நினைவுகூர முடியாது. எனது தந்தையையும் புலிகளே கொலை செய்தனர். புலிகளுடன் தொடர்புடையவர்களை நினைவுகூருவதற்கு தடைவிதிப்பது தொடர்பான உறுதியான முடிவை இந்த அரசாங்கம் எடுக்கவேண்டும் என்றும் முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க மேலும் வலியுறுத்தியுள்ளார். (அ-ம-44)

## சுனாமி...

பகுதிகளில் சுனாமி எச்சரிக்கை இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. அந்த எச்சரிக்கை இயந்திரங்களில் இருந்தே, இவ்வாறு ஒலி எழுப்பப்பட்டுள்ளது. இதையடுத்து சுனாமி வருகின்றதோ? என்று மக்கள் அச்சமடைந்துள்ளனர். எனினும், அது சுனாமி அலையால் விடுக்கப்பட்ட எச்சரிக்கை அல்ல என்றும், வட்டுவாகல் கடற்படைத் தளத்தில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சி ஒத்திகையால் எழுப்பப்பட்ட ஒலி என்றும் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சுனாமி எச்சரிக்கைக்கு நிகரான ஒலியெழுப்பி பயிற்சியை மேற்கொள்ளும்போது அது தொடர்பில் பொதுமக்களுக்கு முற்கூட்டிய அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும் என்றும், கடற்படையினர் மக்களை தேவையற்ற விதத்தில் பதற்றமடைய வைக்கக்கூடாது எனவும் பொதுமக்கள் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளனர். (அ-ம-இ)

## ஐ.தே.க.வுக்கு...

வெற்றியை நோக்கி நகரமுடியும். எனவே, எதிர்காலத்தில் நாம் அனைவரும் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சியாக பயணிக்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறிய எனது தந்தை காமினி திஸாநாயக்க, 1994ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் திரும்பினார். பிரதித் தலைவராகி, ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்டார். அதேபோன்றதொரு நடவடிக்கையை சஜித் முன்னெடுக்கவேண்டும். அவர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வரவேண்டும். கட்சியின் எதிர்கால வேலைத்திட்டம் தொடர்பில் கட்சித் தலைவர் ரணிலுடன் கலந்துரையாடி முன்னோக்கிச் செல்லவேண்டும். ஐக்கிய தேசியக் கட்சிக்கு இரண்டாம் தலைமைத்துவமொன்று உருவாக்கப்படவேண்டும்" - என்றார். (அ-ம-44)

## போதுமான...

மனையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெள்ளப் பேரிடர் ஒன்று ஏற்பட்டால் நிலைமைச் சமாளிக்கக்கூடிய வகையில்தான் நாம் என்றும் தயாராக இருக்கின்றோம். அண்மையில் பெய்த கனமழையால் யாழ். போதனா மருத்துவமனைக்குள் வெள்ளம் புகுந்தது. இதனால் ஒருசில சிகிச்சைகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. ஆனால், மிக விரைவாகவே தற்போது நிலைமைகள் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன - என்றார். (அ-ம-125)

## இடமாற்றம்...

ஆர்.முரளிஸ்வரன் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மருத்துவர் ஜி.சுகுணன் மட்டக்களப்பு கல்முனை வடக்கு மருத்துவமனையின் பணிப்பாளராகவும், மருத்துவர் டி.வினோதன் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளராகவும், மருத்துவர் கே.ஜி.சீ.வை.எஸ். வீ.வீரக்கோன் ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளராகவும், மருத்துவர் திருமதி பி.எஸ்.என்.விமலரட்ண கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளராகவும், மருத்துவர் என்.சீ.டி.ஆரியரட்ண வவுனியா பொது மருத்துவமனைப் பணிப்பாளராகவும், மருத்துவர் டபிள்யூ.ஏ.நி. நிஷங்க அம்பாறை மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளராகவும், மருத்துவர் எம்.எச்.எம்.அசாத் மன்னார் மாவட்ட பொதுமருத்துவமனையின் பணிப்பாளராகவும், டபிள்யூ.கே.சீ.பீ.வீரவத்த கிளிநொச்சி பொதுமருத்துவமனையின் பணிப்பாளராகவும், டி.எம்.ஏ.கே.திஸாநாயக்க கிளிநொச்சி மாவட்ட பிரந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளராகவும், எஸ்.என்.வீ.பிறேமதாஸ முல்லைத்தீவு பொது மருத்துவமனையின் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். எதிர்வரும் 2ஆம் திகதிக்குப் பின்னர் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. (அ-ம-18)

## தீவிரமான...

வேகத்தில் தமிழகத்தைத் தாக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டலத் தலைவர் பாலச்சந்திரன் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமீபத்தில் உருவான காற்றழுத்தத் தாழ்வு மையங்களில் பெங்கால் புயல் வித்தியாசமான அமைப்பையும், கணிக்க முடியாத நகர்வுகளையும் கொண்டிருந்தது. எனினும், நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் புயலாக வலுப்பெற்றுள்ளது. இது 'தீவிரத்தன்மையுடைய புயல்' என்ற வகைப்பாட்டுக்குள் வருகின்றது. மணிக்கு 70 கிலோமீற்றர் தொடக்கம் 90 கிலோமீற்றர் வேகத்தில் புயல் கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், சென்னை, திருவள்ளூர் மாவட்டங்கள் மற்றும் புதுவை பகுதிகளில் புயலின் தாக்கம் அதிகமாக உணரப்படும் - என்றார். (அ-ம-இ)


# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- ▲ 20 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ▲ 2 ஆண்டுகள் பூர்த்தியான தென்னங்கன்றுகள் உள்ளன.
- ▲ 2 பரப்புள்ள துண்டு ஒன்றுக்குள் 6 தொடக்கம் 10 வரையான தென்னங்கன்றுகள் உள்ளன.
- ▲ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்.
- ▲ அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

**ஒரு பரப்பின் விலை**

- ▲ நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
- ▲ கடற்கரையை (**Beach**) முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
- ▲ 20 அடி பாதையை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் **9,75000** ரூபாய் மட்டுமே
- ▲ தரகர் தேவையில்லை
- ▲ பார்வையிடும் நேரம்: - காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை

**தொடர்பு: ஜெயம்**

**077 814 7389**
**077 986 5457**

(CS/1944 A) 3-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

**(நிலப்பரப்பு)**

மருதனார்மடம் சந்திக்கு மிக அருகாமையில் காப்பெற் வீதியை முகப்பாகக் கொண்ட 1 1/2 பரப்புகளாகப் பிரிக்கப்பட்ட வணிக மற்றும் வீடு கட்டுவதற்கான காணித்துண்டுகள் உடன் விற்பனைக்கு உண்டு. இன்றே முந்துங்கள்.

தொடர்பு:- **077 132 9682**

(CS/56783) J-1

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணம், நல்லூர், கொக்குவில், கோண்டாவில், கல்வியங்காடு, A9 வீதி ஆகிய பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புக்கு: **076 389 6555**

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் உணவகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் உடனடியாக தேவை.

- சமையலாளர் (முன்னனுபவம் தேவை)
- உதவியாளர்


விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

**077 800 8224**

(CS/1941) J-1

எபெனேசர்; இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார். - 1 சாமுவேல் 7:12

# 65th Anniversary Service
# ஆண்டு நிறைவு ஆராதனை



## ZION CHURCH - SRI LANKA
## சீயோன் தேவாலயம் - இலங்கை



எமது திருச்சபை 65 ஆண்டுகளை நிறைவு செய்வதை முன்னிட்டு ஆண்டவருக்கு நன்றி செலுத்துவதற்காக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் உள்ள எமது 34 கிளைச்சபைகளும் இணைந்து பங்குபெறும் நன்றி ஐக்கிய ஆராதனை எமது பிரதான ஆலயத்தில் நாளைய தினம் நடைபெறும்.



| நாள்: | நேரம்: |
|---|---|
| **01.12.2024** (ஞாயிற்றுக்கிழமை) | **9:30** (காலை) |

**துதி ஆராதனை:**
நுவரெலியா சிமிர்னா தேவாலயத்தின் தலைமைப்போதகர்
**வண. டேவிட் போல்**


**தேவ செய்தியாளர்:**
இலங்கையின் மூத்த பெந்தெகொஸ்தே ஊழியர்களில் ஒருவரும் இலங்கை கல்வாரி தேவாலயத்தின் தலைமைப் போதகருமான
**கலாநிதி திஸ்ஸ வீரசிங்ஹ**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

**இடம்:**
இல: 24,
இராமையாச்செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்

கிறிஸ்துவின் பணியில்..
**வண. ஜோஹணன் டி.பிலிப் - தலைமைப்போதகர்**

# மரண அறிவித்தல்
# ஆறுமுகம் கனகசிங்கம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04.05.1940 | 28.11.2024 |

சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கனகசிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் (28.11.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற விநாசித்தம்பி – பார்வதி தம்பதியரின் மருமகனும், இராசம்மா அவர்களின் அன்புக் கணவரும், வேழவேந்தன், செந்தூரன் (கனடா), சுகந்தன் (உரிமையாளர், Venkadeswara Agro Industry (Pvt) Ltd. & Venkadeswara Express), சுகந்தினி, அருண் (பிரான்ஸ்), தவலோஜினி (பிரதி ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகந்தினி, சர்வாம்பிகை (கனடா), பாமினி, ஸ்ரீசுகந்தராஜா (கனடா), பவித்திரா (பிரான்ஸ்), நிரோஜன் (உதவித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலகம் கோப்பாய் மற்றும் வேலணை) ஆகியோரின் அன்பு மாமனாரும், மயில்வாகனம், காலஞ்சென்ற இராசம்மா, தம்பிராஜா மற்றும் கமலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மகிந்தன், சயந்தன், விஹாசினி, அஷ்வியா, அபினேஷ், சமிதா, அபிஷேக், விபின், ஸ்ரீஅஞ்சலா, ஸ்ரீ அஞ்சலோ, அஜ்வி, அத்விக், பிரவிந், மற்றும் கேசரா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (01.12.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.15 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி, பாதகலட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

| | |
|---|---|
| வேழவேந்தன் | : 077 712 2590 |
| சுகந்தன் | : 077 774 3578 |
| சுகந்தினி | : 077 410 5320 |
| அருண் | : + 33 605 622 237 |
| செந்தூரன் | : + 1(416) 8233092 |

இராஜ வீதி,
சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

(CS/56781) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.11. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.